செந்தமிழ்

தொகுதி 76 செப்டம்பர் '82 பகுதி 3

மதுரைத் தமிழ்ச் சங்கம்
THE MADURA TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்தும்

தமிழ் இலக்கிய இதழ்

ஆசிரியர்: டி. பி. எம். பெரியசுவாமி

செந்தமிழ்

தொகுதி - 76 செப்டம்பர் 1982 பகுதி - 3

உள்ளுரை

எண்	பொருள்	பக்கம்
1.	புதிய குறள் — கவிராச பண்டித இராமசுப்பிரமணிய நாவலர்	... 105
2.	பாவை ஒப்பீடு — டாக்டர் தே. ஆண்டியப்பன்	... 108
3.	இராமாயணக் கும்மி — டாக்டர் சுபாஷ் சந்திரபோஸ்	... 113
4.	முறை சாராக் கல்வி வாய்ப்பும் பயனும் — கே.வி. ஜெயராஜ் M.A; M.Litt.	... 116
5.	இருதய நோய் தடுக்கும் வழி முறைகள் — பழனி. அரங்கசாமி	... 122
6.	சிந்துவெளி நாகரிகம் — அசாமி	... 126
7.	புதுக் கவிதை — நூல் மதிப்புரை	... 130
8.	ஆண்டாள் பாசுரங்களில் புராணம்	... 132
9.	சங்கச் செய்திகள்	... 142

இனிய வாழ்த்துகள்

தமிழ் இலக்கிய அன்பர்களின் விழைவுக் கேற்ப 'செந்தமிழ்' நிலைபெற்று வளர்கிறது. ஆல் போல் தழைத்து அருகு போல் வேரோடும் சிறப்பும் செம்மையும் தொடர்ந்து பெருக வேண்டும். பல்லாயிரக்கணக்கான தமிழாசிரியப் பெருமக்களின் கையில் 'செந்தமிழ்' தவழவேண்டும். வணிக நோக்கமின்றித் தன்னாலியன்ற தமிழ்ப்பணியே தலையாய கடமையெனக் கொண்டு செயல் புரியும் இந்த இலக்கிய இதழினைத் தொடர்ந்து படிக்கும் தமிழ்ப் பெருமக்கள் எமக்கு அரிய ஆலோசனைகளை வழங்கலாம்; பாராட்டுக்குரியது என்று தோன்றினால், நண்பர்களையும் இவ்விதழைப் படிக்குமாறு தூண்டலாம். குறைகாணின் எமக்கு எழுதி அதனைக் காலத்தான் நீக்கி நிறைவு செய்யலாம்.

பதவியேற்ற சின்னாட்களுக்குள் தமிழ்ச் சங்கத்திற்கு வருகை தந்து, சங்கப்பணியினை ஆவலோடு கேட்டறிந்து வாழ்த்துரைத்துச் சென்ற தமிழ்ப்பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வி.ஐ. சுப்பிரமணியன் அவர்களும் தமிழாசிரியர்களின் ஒருமித்த ஆதரவு இருந்தாலே போதுமானது என்று கூறியதை ஈண்டு நினைவுபடுத்துகிறோம். தமிழ்ச் சங்கத்தில் பயின்று நாடெங்கணும் பணிபுரியும் ஆசிரியப் பெருமக்கள் செந்தமிழின் வளர்ச்சியில் ஆர்வம் காட்டவேண்டும். தமிழ்ச்சங்கம் என்கிற குடும்பத்தைச் சார்ந்தவர் என்ற உணர்வினைச் செயற்படுத்த வேண்டும். மாவட்ட மைய நூலகங்களிலும், அதனைச் சார்ந்த கிளை நூலகங்களிலும் செந்தமிழைப் பெறுதல் வேண்டும் என்று ஆணைபிறப்பித்த தமிழக அரசைப் பாராட்டுகிறோம்.

அண்மைக்காலத்தில் இயற்கையெய்திய இராமசுப்பிரமணிய நாவலரின் புதிய குறளும், சுவடியிலிருந்து அச்சேறுகின்ற இராமாயணக்கும்மியும் இவ்விதழை அலங்கரிக்கின்றன. பாவைபற்றிய இரு கட்டுரைகளும், ஒரு மருத்துவக் கட்டுரையும், சிந்துவெளி நாகரிகம் பற்றிய சிறு குறிப்பும் இவ்விதழில் இடம் பெறுகின்றன. நியூயார்க் நகரில் சென்ற திங்களில் நடைபெற்ற அகில உலக ஒப்பிலக்கிய மாநாடு பற்றிய டாக்டர் வை. சச்சிதாநந்தம் அவர்களின் சிறப்புரை அடுத்த இதழில் வெளியாகும்.

— ஆசிரியர்.

புதிய குறள்

பண்டித இராமசுப்பிரமணிய நாவலர்

பொருள்

பொருளல்ல வெல்லாம் பொருளாக் குவதே
பொருளிற் பிறந்த பொருள். 58

ஊக்கம்

ஊக்கமிலார் யாவ ருலகினெனிற் சிறந்த
ஆக்கமொன் றில்லா தவர். 59

முயற்சி

ஊக்க மிருந்து முதவா முயற்சியின்
ஆக்க முறாஅ தவர்க்கு. 60

தடுமாற்றம்

அடுமாற்ற மாகி யழிவா ரெனினுந்
தடுமாற்ற மின்மை தகும். 61

ஆராய்ச்சி

சில்லாண்டு வாழுந் திருவிலர்க் கென்னாகும்
பல்லாண்டு கூறிப் பயன். 62

பேதைமை

ஒளியை விழுங்கி யுறையுமிருள் போல்வார்க்
களியினுஞ் செல்லா தறிவு. 63

மறையாமை

மறைப்ப மறைக்க மறைக்கப் படாத
மறையாமை வேண்டு மறந்து. 64

எதிர்காத்தல்

எதிர்காப் பவன்போற் கருத்தொன்றி யாண்டுய்ய
எதிர்காத்த லென்று மினிது. 65

பயனில் சொல்

பயனில சொல்லிற் பயனென்ன ஞாலத்
துயலின்மை யாண்டு முறும். 66

தொழில்

தொழில்வேண்டு மெல்லார்க்குந் தோன்றும் பிறப்பில்
எழில்வேண்டும் வேண்டு மெனின். 67

செயல்

செய்வன வெல்லாஞ் செயல்வேண்டு மல்லன
செய்யாமை யாகுந் திறன். 68

செருக்கு

செருக்குஞ் சினமுஞ் சிறுமையு மில்லார்
இருக்கு மிடநன் கினிது. 69

நட்பு

பெட்பிற் பிறந்த பெரும்பய னெல்லா நண்
ணட்பிற் பிறந்த நயம். 70

ஈகை

ஈதலிற் சாத லினிதென்ப ஞாலமழி
வாத லறியா தவர். 71

செலவு

திருவார்ந் திருந்து சிறப்புற வேண்டின்
வருவா யறிந்து வழங்கு. 72

கள்ளாமை

எள்ளாமை வாழ்த லினிதென் பவர்க்கெல்லாங்
கள்ளாமை யாகுங் கடன். 73

கவறாடல்

உவரார் வறுமை யுறுவ ரெணைத்துங்
கவறாடி நின்றக் கடை. 74

படிறு

அடியோ டழிக்க வதனை யறிவார்
படியைக் கெடுக்கும் படிறு. 75

கயமை

நயவர்க் குளதா நலத்தின்க ணில்லை
கயவர்க் குரிய கருத்து. 76

பொருட்பெண்டிர்

பொருண்மாதர் மாட்டுப் புகுவார் தமைவிட்
டருண்மா தகலு மழன்று. 77

கள்ளுண்ணாமை

உள்ளிற் பிறந்த வுணர்வழிக்கு மெஞ்ஞான்றுங்
கள்ளிற் பிறந்த கலம். 78

வறுமை

சிறுமை யனைத்துஞ் செறியு மொருகால்
வறுமை புகுந்த மரபு. 79

இரவு

இரவாமை நின்றக் கடைத்தும் பிறர்மாட்
டிரவாமை வேண்டு மிவண். 80

மருந்து

மருந்துண்டு வாழாமை வாயி னதுவே
இருந்துண்டு வாழ்ந்த வியல்பு. 81

ஊழ்

ஆழ முயற்சி யறப்பிற தோன்றலின்
ஊழென்றொன் றுள்ள துலகு. 82

பாவை ஒப்பீடு

டாக்டர். தே. ஆண்டியப்பன்
இணைப் பேராசிரியர் (தமிழ்),
மதுரைப் பல்கலைக் கழகம்.

மரபுவழி மதிப்பீட்டைச் சிறிது மறந்துவிட்டுப் பரிணாம நியதிக்குள் இலக்கிய வளர்ச்சியைக் காணும் முயற்சி இப்போது வளர்ந்து வருகிறது. எல்லா வகையிலும் ஒத்துப் போகாத நூற்களைக் கூட, உவமை, அணிநலம், கற்பனை என்ற தலைப்புக்களில் ஒப்பிட்டுப் பார்த்தாவது தம் இலக்கியப் பசியைத் தீர்த்துக்கொள்வோர் பெருகி வருகின்றனர். கதையால் வேறுபட்டாலும் காவியம் என்னும் தலைப்பில் சிந்தாமணியும் சேக்ஸ்பியரும் ஒப்பு இலக்கிய ஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறது. இனத்தால் வேறுபட்டாலும் விடுதலை உணர்வால் பாரதியும் பைரனும் ஒப்பீட்டுக்கு ஆளாகிவிடுவர். மொழியால் வேறுபடினும் வீரயுகம் என்னும் அடிப்படையில் கிரேக்கமும் தமிழும் ஆய்வுப் பொருளாகலாம். இவ்வகை ஆய்வால் சில பொதுவிதிகளை வகுத்துணர முடியும். ஆனால் ஒரே அமைப்புடைய ஒருமொழியில் அமைந்த இலக்கிய வகையை ஆராயும்போது அத்தனிப்பட்ட இலக்கியப் பிரிவின் வளர்ச்சியில் ஒருசில நிலைகளை, ஒருமைப்பாட்டினை (Homologus structure) நிச்சயமாகக் காணமுடியும் அந்த நம்பிக்கையோடு திருப்பாவை, திருவெம்பாவை என்னும் இரண்டு பாவை நூல்களும் ஆய்வுப் பார்வையில் ஈண்டு ஒப்பிடப்படுகின்றன.

பாவை நூல்களை மேல்எழுந்த வாரியாகப் பார்க்கும்போதும் சில வேறுபாடுகளைக் காண முடிகிறது ஒன்று வைணவநூல்; மற்றொன்று சைவநூல். இருநூலுக்கும் சங்க காலம் முதற்கொண்டு ஒரு பாரம்பரியம் உண்டு. மார்கழி மாதம் கோகுலத்தில் விடியற் காலையில் எழுந்து யமுனையில் நீராடி, தேவியை வழிபட்டு, கண்ணன் தமக்குக் கணவனாக வரவேண்டும் என்று வேண்டி நின்றதாகப் புராணத்தால் அறிகிறோம். திருப்பாவையிலும் ஆண்டாள் அந்த நந்தகோகுலத்தைக் கற்பனையால் படைத்து விடுகிறாள். கண்ணனிடம் பறைவேண்டிச் சென்றவர்கள் அவனுக்கே ஆட்செய்யும் அன்பு வரத்தையே கேட்கின்றார்கள். ஆய்க்குலத்துப் பெண்டிர் கண்ணனைப் பாடிப் பரிசுபெற்ற வரலாற்றைத்தான் ஆண்டாளும் கவிதையாகப் பாடுகிறாள். கேசவனை, திங்கள் முகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி அங்கு அப்பறை கொண்ட ஆற்றைப்

(வரலாற்றை) பட்டர்பிரான் கோதை பாடுவதாகவே வருகிறது. மணிவாசகர் இதுபோன்ற கருத்தைத் தமது பாவையில் புலப்படுத்த-வில்லை.

திருப்பாவையைப் பொறுத்தவரை ஆயர்பாடிச் செல்வச் சிறுமிகள் மார்கழி நீராடலில் பங்கேற்கின்றனர். திருவெம்பாவையில் குறிப்பிட்டகுலப்பெண்களுக்கு என்ற செய்தி இல்லை. திருப்பாவையில் *நீராடல் போதுவீர் போதுமினோ நேரிழையீர்* என்று கட்டளையிடும் செய்தி பரிபாடலை நினைவுபடுத்துகிறது. அம்பா ஆடலின் ஆய்-தொடிக் கன்னியர் முனித்துறை முதல்வியர் முறைமை காட்ட நீராடச் சென்றனர். கேரளாவில் இன்றும் திருச்சூரை அடுத்த புளிநெல்லி போன்ற கிராமங்களில் வயது முதிர்ந்த பெண்கள் பொழுது புலரும் முன் இளம்பெண்களை அழைத்துச் சென்று நீராடவைப்பதுண்டு. அவர்கள் குளம், ஆறு, புழை முதலியவற்றில் இறங்கி, மதங்க ஓசை எழுப்புவதுபோல் கையால் அடித்துக் குளிப்பார்கள். அதனைத் துடிச்சுக் குளித்தல் என்பர். மணிவாசகரும் *பொய்யார் தடம் பொய்கை புக்கு முகேர் என்ன கையாற் குடைந்தாடுவதாகக்* கவி புனைவார். ஆனால் முனித்துறை முதல்வியர் முறைமை காட்டும் செய்தியும் மதிநிறை நன்னாள் என்ற செய்தியும் மணிவாசகரிடம் இல்லை.

அடுத்த பாடலில் பாவைக்குச் செய்யும் கிரியைகள் கேளீரோ என்று கூறி *நெய்யுண்ணோம் பாலுண்ணோம் மையிட்டு எழுதோம்* என்று தாம் மேற்கொண்ட விரதச் செய்திகளைக் குறிப்பிடுவர். இச் செய்தி திருவெம்பாவையில் இல்லை. திருப்பாவை மூன்றாம் பாடலில் ஓங்கி உலகளந்த உத்தமன்பேர் பாடி பாவைக்குச் சாற்றி நீராடினர். மழைபெய்து செந்நெல் விளைந்து இயற்கைவளம் கொழிக்க நீங்காத செல்வம் நிறையும் என்று பாடினர். திருவெம்-பாவையில் அதனைக் காணோம். நான்காவது பாடலில் மழையைக் கண்ணனாகப் பாவித்து உலகம் செழிக்கப் பெய்திடாய் என வேண்டுவர். திருவெம்பாவை 16வது பாடலில் உமையின் கோலத்தில் மேகத்தைக் கண்டு மழைபொழிய வேண்டுகின்றனர்.

இருபாவையிலும் மழைவேண்டிப் பாடும் மரபு முக்கியமானது. திருப்பாவை ஐந்தாம் பாட்டில் தூயோமாய் வந்து மலர்தூவி, பாடி, சிந்திக்க, பிழையனைத்தும் தூசாகும் என்று வரும். திருவெம்பா-வையில் அச்செய்தி இல்லை. எனவே, மழை பெய்யவேண்டும்

என்ற பாடலைத் தவிர மீதியுள்ள நான்கு கவிதைகளில் வரும் செய்திகளை மணிவாசகர் அப்புறப்படுத்தி விடுகிறார். அதனால் சடங்குச் செய்திகள் திருவெம்பாவையில் குறைந்து விடுகிறது. அது ஒரு நிலை. அடுத்து திருப்பாவையில் 6முதல் 15வது பாடல்வரை ஒரு தொகுதியாக எண்ணலாம். இத்தொகுதி தரும் செய்தியே திருவெம்பாவையில் எட்டுத் தொடக்கப் பாடலாக அமையும். இவற்றில் பொழுது புலரும் காட்சியும் பள்ளிகொள்ளும் பாவையரின் இயல்பும் அவர்தம் பதிலும் இயல்பாக அமையும் இருபாவைக்கும் உயிர்நாடியாகத் திகழ்கிற பகுதி இதுவே. *ஏலோர் எம்பாவாய்* என்ற குரல் மிக்கொலிப்பது இங்கேதான். ஈதென்ன பேருறக்கம் என்று இடித்துக் கூறும் இப்பகுதியில் ஏலோர் என்பது எழுந்துணர் என்ற பொருளில் வருகிறது. ஆண்டாள் 29 பாடல்களில் *ஏலோர் எம்பாவாய்* என்று அமைத்து 30வது பாடலில் *இன்புறுவர் எம்பாவாய்* என்று முடிப்பாள். மேலும் கோகுலத்து ஆயர்பாடிச் சிறுமியர்களை அழைப்பதுபோல் கற்பனை செய்ததால் நந்தகோபன் யசோதை, பலராமன், கண்ணன், நப்பின்னை அனைவரையும் ஏலோர் என்றே பாடுகிறாள்.

மணிவாசகர் பாடல்களின் அமைப்பைச் சீர்ப்படுத்திக் கொள்கிறார். பாவையர் பாட்டை இருதிறமாக வகைப்படுத்திக் கொள்கிறார். முதல்இருபதுபாட்டிலும் ஏலோர் எம்பாவாய் என்றுதோழியரை அழைப்பார். எஞ்சிய 10பாடல்களிலும் பள்ளி எழுந்தருளாயே என்று அமைப்பார். அது திருப்பள்ளி எழுச்சி என்று தனிமைப்படுத்துவதைப் பார்க்கிறோம். உயிரை ஏலோர் (எழுந்துணர்)என்று கூறியவர் இறைவனை எழுந்தருள் என்றுதானே கூறமுடியும். உயிர்கள் எழுந்துணர வேண்டும்; இறைவன் எழுந்தருளவேண்டும் என்பது சமயத் தத்துவம். அதனை உணர்த்தும்வகையில் பாட்டை அமைத்தது மற்றொருநிலை.

எத்தனையோ பிறப்பெடுத்தாலும் வயது முதிர்ந்த கன்னியராய் வாழ்ந்துவருகிறோம். அவனோடு கலந்து வீடுபெறும் நோக்கமில்லை. மணவாழ்வை நினையாத பேதைப் பெண்போல் துயில்கிறோம். எனவே துயில் எழுப்புதல், நீராடுதல் என்று 20 பாடல்களை வகுத்துக் கொண்டார். உணர்வுத் துயில் நீங்கி அன்பில் நீராடிய மக்கள் இறைவனை வலம் வந்து பள்ளி எழுந்தருள வேண்டுவதில் பொருளுண்டு. அறிதுயில் கொண்ட இறைவனை எழுந்தருள வேண்டுவதுதானே நியாயம்! இதுவோர் வளர்ச்சி நிலை.

ஒன்பதாவது பாடலில் இறைவனை வாழ்த்தி, ''உன்னடியார் தாள் பணிவோம். ஆங்கவர்க்கே பாங்காவோம். அன்னவரே என் கணவர், அவர் சொன்ன பரிசே பணி செய்வோம். இந்நிலை வாய்த்தால் குறையில்லை'' என்ற குரல் திருவெம்பாவையில் உண்டு. திருப்பாவையில் இல்லை. இறைவனை ஏழைப் பங்காளனைப் பாடேலோர் என்று கூற தோழியர்கள் எல்லோரும் ஏது அவன் ஊர்? ஏது அவன் பேர்? ஆர் உற்றார் ஆர் அல்லார்? ஏது அவனைப் பாடும் பரிசு என்றெல்லாம் கேட்கும் இறை ஆராய்ச்சி முறை மணி வாசகர் காட்டும் மற்றோர் வளர்ச்சி நிலை. திருவடியே போகநிலை என்பது திருவெம்பாவைக்கே உரியது.

பதினொராம் பாடலினால் தடம் பொய்கையில் நீராடும் குறிப்பைக் காண்கிறோம். சிவானுபவத்தைப் பேரின்ப வெள்ளமாகப் பாடும் ஆசையால் இப்பகுதியை மணிவாசகர் விரிவுபடுத்துகிறார், தீர்த்தன் சிவலோகன் என்று காட்டுகிறார். இதுவுமோர் வளர்ச்சி நிலை. பதினாறாவது பாடல் மழை வேண்டும் பாடல். எனவே இறைவனைத் துதிப்பதும் மழையை வேண்டுவதும் இயல்பென அறிகிறோம். நந்தகோபன் அரண்மனை வாசலில் தூயோமாய் வந்தோம் என்று கூறும் திருப்பாவைக் குறிப்பால் நீராடி வந்த செய்தி புலப்படுகிறது. நீராடப் போதுவீர்; நீராட மழையே பெய்-திடாய்; நீராடாதே பள்ளிக்கிடத்தியோ என்ற பேச்சுக்கள் ஆங்காங்கே வரினும் ஆடும் காட்சியை மணிவாசகரே விரிவுபடுத்துகிறார்.

திருவெம்பாவையில் இறைவன் கழல்பாடி புனலாடி நின்ற மகளிர் எல்லாம் எங்கள் பெருமான் உனக்கொன்று உரைப்போம் என வரம் கேட்டு நிற்கும் காட்சியுண்டு. எம்கொங்கை நின்அன்பர் தோளல்லால் சேரற்க. எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க. கங்குல்பகல் எம் கண் மற்றொன்றும் காணற்க. இப்பரிசே நல்குதி-யேல் ஞாயிறு திசைமாறினும் எமக்கு அச்சமில்லை என்பர். இங்கு வெளிப்படும் தொண்டர் பெருமை இன்னொரு படிநிலை. இது போன்ற வேண்டுகோள் திருப்பாவையில் இல்லை. அந்நூலில் கண்ணனைப் பாடிப் பறைகொண்டு, கேட்கும் பரிசினால் சூடகம், தோள்வளை, தோடு, செவிப்பூ, பாடகம் முதலிய பல்கலம் அணி வோம்; புத்தாடை உடுப்போம். அதன்பின் பாற்சோறு நெய்பெய்து முழங்கை வழிவாரக் கூடியிருந்து விருந்துண்போம் என்கின்றனர்.

இங்ஙனம் விருந்துண்ணும் செய்தியை திருவெம்பாவை கூறவில்லை. பறை பெற்றதோடு நின்றுவிடாமல் எற்றைக்கும் ஏழ்ஏழு பிறவிக்கும் உன்தன்னோடு உற்றோமே ஆவாம்; உனக்கே நாம் ஆட்செய்வோம் என்று கூறி, கறவைகள் பின்சென்று கானம் சேர்ந்துண்ணும் பழைய வாழ்வை மேற்கொள்ளும் குறிப்பு திருப்பாவையில் உண்டு. மணிவாசகர் அங்ஙனம் அமைக்கவில்லை. தொடக்கம், விழாமுடிவு, பரிசுபெறல் என்று ஆண்டாள் அமைப்பது கதைநோக்கு. துயில் எழுப்பல், நீராடல், என்று மணிவாசகர் அமைத்துக் கொண்டு பிற-வற்றை நீக்கிவிடல் கருத்துநோக்கு. இதுவும் ஒரு வளர்ச்சி நிலை. கருத்தலகுகளை (The matic units) ஒப்பிடும்போது துயிலெழப்பாடுதல், மழைபெய்ய வேண்டுதல், நீராடுதல், இறைவனை வேண்டுதல், போற்றிப் பாடுதல் என்னும் ஐந்து நிலையில் இரு பாவை நூல்களும் இணையாக நிற்கின்றன.

இராமாயணக் கும்மி*

— டாக்டர் சுபாஷ் சந்திரபோஸ்
தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம்.

தசரதன் - நாட்டிய மகளிர் உரையாடல்

வேந்தனும் யோசனை யாகவேதான் முகந்
தாழ்ந்து மேலாடியுந் தானிருக்க
மாந்தளிர் போலவே மேனியுமா யிப்போ
வந்தாரே நாட்டிய மாதர்களும்
வாட்டமு மென்ன மகிபதியே யிப்போ
வந்த மனஸ்தாப மென்னவென்றார்
[மேகம் பொழியவே மேதினியி லிங்கே
மிக்கதோர் வேள்வியும் விரும்ப] 34

ஆகமு மிஞ்சிய கோட்டுரிஷி யதுக்
கானபேரில்லை யழைக்க வென்றார்
நாங்கள ழைத் தொரு திங்களிலே வந்து
நாடுவோம் பாரையா ராச மன்னா
தாங்கலை விட்டிடு மென்றுமே தானப்போ
தானுமே சென்றாரே தையலரும்

நாட்டிய மகளிர் கோட்டுரிஷியைக் காணச் செல்லல்

சென்றிரு காதங்க ளன்று தினமிகச்
சேர நடந்துமே சேடியரும்

போனதோர் பெண்களு மாலையு மிவர்
பூந்துமே தேடியும் போகையிலே
கானக வேங்கை மானுட னடுக்
காட்டி லிருந்தாரே கோட்டுரிஷி 35

கோட்டுரிஷியைக் காணல்

வஸ்திர மானதில்லாமலுமே மற
வாகவு மன மில்லாமலுமே
பத்தையுங் காடுக ளானதிலே முனி
பாந்தி யிருந்தாரே பண்புடனே 36

---

* அடைப்புக் குறியிலுள்ள வரிகள் கக்கரை சுவடியில் மட்டுமே காணப்படுகின்றன.

துஷ்ட மிருக மனைத்தினுமே கூடி
சூழ்ந்து மிருக்கச் சுடர்மணி போல்
மட்டடங் காதவர் கோட்டு ரிஷி தனை
மாதர்கள் கண்டே வனம்புகுந்தார் 36

இவ்வகை மாதரு மப்படியே துகி
லெல்லாம் உரிந்து மெடுத்து வைத்து
செவ்வையுமாக நிர்மாணமுட னங்கே
சேர்ந்துமே போனார்கள் சேடியரும் 37
கண்டதே யோட்டம் பிடித் தெடுத்தார்
கலைக்கோட்டு மகாரிஷி கால்பதறி
ஒண்டொடியார்கள் தமக்குமேதான் பயந்
தோடியே தானுமொளிய லுற்றார்

[பெண்களு மோடினா ரப்படியே முனி
பின்னுமே யோடினா ரப்படியே]
கண் கொடுத்திட்டங்கே கண்டிலரே முனி
காட்டினி லோடும் கடுமையிலே 38
ஓடிப் பிடிப்பது வார்த்தையுமே யினி
ஒவ்வாது தானுமே யொண்டொடியே
தேடியே பார்ப்போ முனியையு மே தானவர்
தின்பது தீனியைச் சென்று மென்றார்

பார்க்கவும் கண்டனர் பூஞ்சருவு மலர்ப்
பட்சணம் பண்ணிய பண்புகளை
நோக்கியே தானிந்தப் பெண்க ளெல்லாமொரு
நுண்மை செய்தார் நுணுக்கமொடு 39
உப்பொடு பாலுமே சக்கரையும் சரு
கூட்டியே கூட்டி யுணர வைத்தார்
விற்பன ராகிய கோட்டுரிஷி யதை
மென்றுமே தின்றார் விருப்பமுடன்

ரெத்தம் பறந்தங்கே மாமுனியும் பெண்கள்
நேரிட வந்தாரே நேசமொடு
மெத்த மிருகமுந் தானுமே தானுரம்
வைத்துமே கொம்பும் வருகுதென்று 40

சிங்கார மாகிய பெண்களெல்லா மப்போ
சேர்ந்து விளையாடிச் சூழ்ந்து கொண்டு
இங்கித மான வைபோக முள முனிக்
கிச்சையாய் மன்மதலீலை யிட்டார்

சாதக மாமுனி கூடியுமே யொரு
சந்தோழ மாகவே தான் புணர்ந்தார்
மாத மிரண்டுமே யானதின் மேலிந்த
மாதர்கள் சொல்வார்கள் வார்த்தையுமே 41
ஆருக்கு மாதவ மிக்கவரே தின
மானது மெத்தவே நாங்கள் வந்து
ஊருக்குப் போகவு முத்தரவே யெங்களுக்
கோதிடு மென்றாரே யொண்டொடியும்

தானும் வருகுவேன் மாதரசே யரை
நாழிகை விட்டுமே நான்பிரியேன்
தேனுங் கசக்குமெனக் கிங்கே யுங்கள்
தேனிதழே சிறக்கு மென்றார் 42
நீரையா தானும் வருவதுவோ தவ
நீதனே தானது நீதியுமோ
தூரவுந் தானங்கே ஊருமென்றா ரென்ன
சொன்னாலும் வாரேன் துடர்ந்துமென்றார்.

தங்கச் சிவிகைகள் போலவுமே யவர்
தாமே யமைத்தங்கே தாங்கியுமே
செங்கைக் குடையுள்ள ரோமபதர் கங்கே
செப்பியே விட்டனர் சேதியுமே 43

—தொடரும்

முறைசாராக் கல்வி

வாய்ப்பும் பயனும்

கே.வி.ஜெயராஜ் M.A., M.Litt.
மதுரைப் பல்கலைக் கழகம்

கல்வியின் பயனையும், பெருமையையும் தமிழ் இலக்கியங்கள் இயம்புகின்றன. திருவள்ளுவர்,

''கண்ணுடையர் என்பர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்''

என்று கல்வியின் முக்கியத்துவத்தை நயம்படக் கூறுகின்றார். ஆயினும் கல்வியின் பயனை அனைவரும் அடைவது எளிதல்ல.

பண்டைக் காலம் தொட்டு தமிழகத்தில் கல்வி பயிற்றுவிக்கப்படுகின்றது. ஆனால் அதனைக் கற்பிக்கும் முறையில் பல மாறுதல்கள் இருந்தன. ஆரம்பத்தில், மாணவர், ஆசிரியரின் இருப்பிடத்தில் தங்கி ஆசானுக்கு வணங்கிப் படிக்கும் குருகுலமுறை இருந்தது. மாணவரே ஆசிரியருக்குக் காணிக்கை (சம்பளம்) செலுத்த வேண்டியிருந்தது. சோழர் காலத்தின்போது அரசின் ஆதரவில் கல்விச் சாலைகள் இருந்தன. காந்தளூர்ச் சாலை, ராசராசப் பெரும் சாலை, ஆகிய இவையே இதற்குச் சான்றுகள். ஆங்கிலேயர்களுடைய வருகைக்குப் பின்னர் தான் கல்வி நிறுவனங்கள் முறையாகத் தோற்றுவிக்கப்பட்டு நாடெங்கணும் கல்விப் பயன் பலருக்கும் கிடைத்தது. ஆயினும் கல்வி கற்றலுக்குக் கட்டணம் இருந்தமையான் பணச் செலவும் அதிகம் ஆயிற்று. வசதி படைத்தவர்கள் மட்டுமே படிக்க முடிந்தது.

விடுதலைக்குப் பின்னர் இந்திய அரசு, பெருபான்மையான இந்தியர்கள் கல்வியறிவு அல்லாதவர்களாக இருந்தமையின், முறை சாராக் கல்வி முறையில் அனைவரையும் எழுதவும் படிக்கவும் செய்தற்குரிய முயற்சிகள் பலவற்றை மேற்கொண்டது. முதியோர் கல்வி, அஞ்சல்வழிக் கல்வி, வெளிப் பல்கலைக் கழகம் ஆகியன இம்முறை சாராக் கல்வியில் அடங்கும்.

வயது முதிர்ந்த பெரியவர்களுக்குப் பட்டி தொட்டிகளில் எல்லாம் முதியோர் கல்விமுறையில், பல ஆண்டுகளாகக் கற்பித்து வரு-

கின்றனர். அவர்களுக்கு அளிக்கும் கல்வி, அடிப்படைக் கல்வியே, முதியோர்கட்கு உயர்கல்வி பயிற்றுவிப்பது இல்லை. விடுநலை பெற்ற பின்னரும் சிறு வயதினில் கல்வி கற்க இயலாதவர்கள், குடும்பச் சூழ்நிலையின் காரணமாக உயர்கல்வியினைத் தொடர முடியாமல் அரசு, அல்லது தனியார் நிறுவனங்களில் பணியில் சேர்ந்தவர்கள், குடும்பப் பெண்கள், ஊனமுற்றோர், சிறைச்சாலைக் கைதிகள் போன்றோர் உயர் கல்வி பெற வாய்ப்பைக் கொடுக்கும் வகையில் தான் அஞ்சல்வழிக் கல்வித் துறையும், வெளிப் பல்கலைக் கழகமும் இற்றைக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அஞ்சல்வழிக் கல்வித்துறையானது, இந்தியாவில் பல பல்கலைக் கழகங்களில் நடத்தப்படுகின்றது. டெல்லி, பாட்டியாலா, ஜெய்ப்பூர், மைசூர், மீரத், சிம்லா, சண்டிகார், பம்பாய், லூதியானா, வால்டேர், மதுரை, அண்ணாமலை நகர், சென்னை ஆகிய இடங்களில்உள்ளபல்கலைக்கழகங்கள் அஞ்சல்வழிக் கல்வித்துறையின் மூலம் மக்களுக்குக் கல்வியைப் பயிற்றுவிக்கின்றன. இந்திய நாடு முழுவதும் இருபதுக்கு மேற்பட்ட பல்கலைக் கழகங்கள் அஞ்சல்வழிக் கல்வியினை நடத்துகின்றன.

இந்தியாவில்மட்டுமல்லாது, வெளிநாடுகளில் இக்கல்வித்துறை பெரிய அளவில் செயல்பட்டு வருகின்றது. ஆஸ்திரேலியா, போட்ஸ்-வானா கனடா, கானா, காங்காங், ஜமாய்கா, கென்யா, லெசோதோ, மாலவி, மலேசியா, நியூஜிலாந்து, நைஜீரியா, பாப்புவா நியூகினி டான்ஜானியா, உகண்டா, ஜாம்பியா ஆகிய காமன்வெல்த் நாடு-களிலும் முறைசாராக் கல்வி நடைமுறையில் உள்ளது.

ஏனைய நாடுகளைவிட, இந்தியாவில் அஞ்சல்வழிக் கல்விக்கு மாணவர்களிடையே அதிகமான வரவேற்பு இருப்பதற்குக் காரணம், கல்லூரியில் சேர்ந்து கல்லூரிக்கும், விடுதிக்கும் பணம் கட்டிப் படிக்க வசதியற்ற கிராமப்புற மாணவர்கள், சாதிக் கட்டுப்பாட்டினால், வீட்டை விட்டு வெளியே வர முடியாத பெண்கள், அரசுப் பணியில் பணிபுரிவோர் முதலானோர் அதிகபாக விரும்பிச் சேர்வதனால்தான் என்று கூறுவதற்கில்லை.

இன்றைய சூழ்நிலையில் முறையாக நடைபெறுகின்ற கல்வி நிலையங்களில் மாணவர்களைச் சேர்க்கும் முறையில் உள்ள சட்ட திட்டங்கள் (Admission rules). மாணவர் சேர்க்கையில் ஆங்காங்கு

நடைபெறுகின்ற ஒழுங்கீனங்கள் ஆகியவற்றின் காரணமாகவும், அதிகமான மாணவர்கள் அஞ்சல்வழிக் கல்வியை விரும்புகின்றனர்.

கல்வி நிறுவனங்கள் பல தனியாரால் நடத்தப்படுகின்றன. மாணவர்களைச் சேர்க்கும் போது, சாதி, மதம், நன்கொடை போன்ற காரணங்களின் அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கப்படுவதால், பற்பல மாணவர்கள், தகுதியிருந்தும் தாங்கள் விரும்பும் பாடத்தை படிக்க முடிவதில்லை. திறமையிருந்தும் ஆதரவற்ற ஏழை, எளிய மாணவர்களுக்கு அஞ்சல்வழிக் கல்வித் துறை ஒரு அரிய வாய்ப்பாக அமைகின்றது. மேலும் கல்வி நிறுவனங்களில் மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கும் நாட்கள் மிகவும் குறைவு. இயற்கையாகக் கிடைக்கின்ற இயல்பான விடுமுறை நாட்களோடு, ஆசிரியர்கள் செய்கின்ற வேலை நிறுத்தம், மாணவர்கள் செய்யும்வேலை நிறுத்தம் ஆகியனவற்றாலும் கல்வி நிறுவனங்கள் மூடிக்கிடக்கின்றன. பாடம் பயிற்றுவிக்க முடிவதில்லை. இதனாலும் பல மாணவர்கள் அஞ்சல்வழிக் கல்வியையே விரும்புகின்றனர். படிக்கின்ற ஆர்வம் அஞ்சல்வழிக் கல்வி மாணவர்களிடையே இருப்பதை நோக்கும்போது, இதனையே ஒருவகையில் முழு நேரக் கல்வி (full time course) என்று கூடக் கொள்ளலாம்.

மாலை நேரக் கல்விமுறையும் சிலருக்குப் பயன்படுகின்றது. ஆனால் இக்கல்விமுறையில் நகரங்களில் பணிபுரியும் பலர் சேர்ந்து படிப்பதற்கே வாய்ப்பு உண்டு. இம்முறையைப் பகுதிநேரப் படிப்பு (Part time course) என்று கொள்ளலாம். ஆனால் அனைவருக்கும் கல்வி வாய்ப்பு, கல்விப் பயன் அளிப்பதுவே அஞ்சல்வழிக் கல்வித் துறை மற்றும் வெளிப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் நோக்கமாகும். வெளிப் பல்கலைக் கழகத்தில், படிப்பறிவு இல்லாதோரும், பத்தாம்வகுப்பு வரை படிக்காதோரும் சேர்ந்து, படிக்கலாம். பத்தாம் வகுப்பு தேறிவிட்டால் மாணவர்கள் தொடர் கல்வி பயில வெளிப் பல்கலைக் கழகத்திலும், பின்னர் அஞ்சல் வழிக் கல்வித்துறையிலும் சேர்ந்து படிக்கலாம். இத்தகைய முறையினை நாம் சொந்த நேரப்படிப்பு எனக் கூறலாம் (own time).

இவ்வாறாக, முழுநேரம், பகுதிநேரம் ஆகியவற்றோடு விரும்பும் நேரத்தில் படிக்கும் வாய்ப்பு அளிக்கும், அஞ்சல்வழிக் கல்வி போன்ற முறைசாராக் கல்வி முறையால், வறியவர், செல்வந்தர், வலியோர், எளியோர், நகரத்தார், கிராமத்தார் என்ற பாகுபாடு இன்றி அனைவருக்கும்கல்வி கற்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. இவ்வாறு கல்வியில் ஒரு புரட்சியை உருவாக்கும் இந்நாளில் பாரதிதாசனின் கவிதையை நினைவு கூராமல் இருக்க முடிவதில்லை. அவர்,

''வறியவர்க்கெல்லாம் கல்வியின் வாடை
... ...
நாடெங்கும் பாய்ந்தது கல்வி நீரோடை''

என்று கூறியது எவ்வளவு பொருத்தமாகும்!

அஞ்சல்வழிக் கல்வி முறையை தமிழகத்தில் மதுரை, அண்ணாமலை, சென்னை ஆகிய மூன்று பல்கலைக் கழகங்கள் மேற்கொண்டுள்ளன. அவற்றுள் சிறப்புற நடைபெற்று வருவது மதுரைப் பல்கலைக் கழகத்தின் அஞ்சல்வழிக் கல்வித்துறையே. இந்நிறுவனத்தில் இளங்கலை, முதுகலை, ஆசிரியப்பயிற்சிப் பட்டப்படிப்பு ஆகியவை கற்பிக்கப்படுகின்றன. மதுரைப் பல்கலைக் கழகத்தில் அஞ்சல்வழிக் கல்வித்துறை 1971-இல் துவங்கப்பட்டது. துவக்கம் முதல் தொடர்ந்து சிறப்புற நடைபெறுவதற்கு சில சிறப்பு அம்சங்கள் உண்டு. அவை பாடங்களின் தரம், முறையான தொடர்பு வகுப்புக்களில் ஆசிரியர்கள் காட்டிய ஆர்வமும் திறமையும், அதற்கும் மேலாக வானொலிமூலம் பாடம் கற்பித்தல் போன்றவையே யாகும். திருச்சி வானொலிப் பேச்சுக்கு ஆசிரியர்களை அனுமதிக்கும் முறையில், அஞ்சல்வழிக் கல்வித்துறை ஆசிரியர்களுக்குமட்டும் ஒலித் தேர்வு (Audition test) வைப்பது, அவர்களுக்கு அநீதி இழைப்பதாகத் தோன்றுகிறது. அஞ்சல்வழிக் கல்வியில், பணிபுரியாத ஆசிரியர்களை வானொலிப் பேச்சுக்கு அனுமதிப்பது போன்று யாரையும் பாதிக்காத வகையில் ஒருசீரான கொள்கையைக் கடைப்பிடிப்பதே நியாயம் எனத் தோன்றுகிறது.

அஞ்சல்வழிக்கல்வியில் மாணவர்கள் அதிகம் விரும்பிச் சேர்வதால், அவர்கள் செலுத்தும்கட்டணத்தின் மூலம் அதிக வருவாய் கிடைக்கின்றது. எனவே சில பல்கலைக் கழகங்கள் அஞ்சல்வழிக் கல்வித்துறையை

அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரமாகவும், பொன் முட்டை-இடும் வாத்து எனவும் கருதுவதால், அதிகமான மாணவர்களைச் சேர்ப்பதில் போட்டி மனப்பான்மை ஏற்படுகின்றது. பாடத்திட்டம், தேர்வு முறை, தேர்வில் வெற்றிபெற குறைந்தபட்ச மதிப்பெண்-கள் போன்றவற்றில்பல்கலைக் கழகங்களிடையேவேறுபாடுகள் இருக்-கின்றன. போட்டி மனப்பான்மையும், வேறுபாடுகளும் கல்வித்தரம் குறையக் காரணங்களாக அமைவதால், இந்நிலையைப் போக்க, நாடு தழுவிய அளவிலோ, அல்லது மாநிலத்திற்கு ஒன்று என்ற அளவிலோ அஞ்சல்வழிக் கல்விப் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவி, கட்டணம், தேர்வுமுறை, மதிப்பெண்கள், பாடத்திட்டம் ஆகியவற்-றில் ஒரே மாதிரியான கொள்கையை உருவாக்கலாம்.

அஞ்சல்வழிக் கல்வியின் மூலம் வரும் பணத்தை அதற்-கென்று செலவு செய்யாமல், வேறுபல காரணங்களுக்காகச் சில பல்கலைக் கழகங்கள் பயன்படுத்துகின்றன என்று பஞ்சாப் பல்கலைக் கழகப் பேராசிரியர் சத்யபால் ஆனந்த் போன்றோர் கூறுகின்றனர். மாறாக, இப்பணத்தை அஞ்சல்வழிக் கல்வியின் முன்னேற்றத்திற்கே பயன்படுத்தவேண்டும். அஞ்சல்வழிக் கல்வியில் பயிலும், மாணவர்கள் தொடர்பு வகுப்புகள், மற்றும் தேர்வுகள் எழுத நகரங்கள் நோக்கி வரும்போது, ரயில் பயண சலுகைகள் பெற இந்திய ரயில்வேயினர் வழி வகை செய்யவேண்டும்.

ஊனமுற்றோர், விதவைகள், சிறைச்சாலைக் கைதிகள், பணி-யில் இல்லாத மிகவும் பிற்பட்ட வகுப்பினர் போன்ற பிரிவைச் சார்ந்த அஞ்சல்வழிக் கல்வித்துறையில் பயிலும் மாணவர்களுக்குக் கட்டணச் சலுகை அளிக்கவேண்டும்.

கிராமங்களில் இருக்கின்ற மாணவர்கள் தமது பாடங்களுக்குத் தேவையான நூல்களை படிக்க நூலக வசதி செய்து தரவேண்டும். இதற்காக அரசின் கீழ் செயல்படும் நூலக ஆணைக்குழுவினை அணுகி, அவர்களிடம், தரமான பாடப் புத்தகங்களைக் கொடுத்து கிராமங்களில் இருக்கும் நூலகங்களில் வைத்து மாணவர்களுக்குப் பயன்படும்படிச் செய்யக் கேட்டுக் கொள்ளலாம்.

பருவமுறையில் பயிலும் (Semester) மாணவர்கள் அஞ்சல் வழி மாணவர்களைவிட அதிக மதிப்பெண்கள் பெறுகின்றனர். காரணம், இண்ட்டர்னல் அசெஸ்மண்ட். அத்தகைய முறையை அஞ்சல்வழிக் கல்வியிலும், மாணவர்களின் வினா-விடைத்தாள், தொடர்பு வகுப்பு வருகைப் பதிவு ஆகியவை குறித்துப் புகுத்தினால் அதிக மதிப்பெண்கள் பெற வாய்ப்பு இருக்கும்.

B. Ed., M. Ed., குறித்து மாணவர்கள் எண்ணிக்கையை நிர்ணயம் செய்வது முறைசாராக் கல்வியின் 'எல்லோருக்கும் கல்வி' என்ற கொள்கைக்கு மாறுபாடானது. இது குறித்து எண்ணிக்கை நிர்ணய முறையைத் தளர்த்துவது நலம் பயக்கும்.

ஆசிரியர்கள் வாரம் தோறும் வெளியூருக்குத் தொடர்பு வகுப்பிற்குச் சென்று வருவதால், விபத்துகளை சந்திக்க நேரிடும். இத்தகைய ஆபத்திற்குள்ளாகும் ஆசிரியருக்கு, ஓய்வு பெறுகின்ற நாளில் எத்தகைய சலுகைகள் கிடைக்குமோ, அவற்றை, அவர் தம் குடும்பத்திற்கு கிடைக்கச் செய்தல் வேண்டும். அப்போதுதான் திறமையுள்ள ஆசிரியர் பலர் அஞ்சல் வழிக் கல்வித் துறையில் பணிபுரிய முன்வருவர்.

அரசு இப்போது மேல்நிலைப் பள்ளிவரை அஞ்சல் வழிக் கல்வி துவங்க இருப்பதாக அறிய வருகின்றோம். மதுரைப் பல்கலைக் கழகத்தில் வெளிப் பல்கலைக் கழக அமைப்பு இயங்கும்போது, அரசே இதற்குப் போட்டியாக இதனை ஆரம்பிப்பது சரியானதாகத் தோன்றவில்லை. மதுரைப் பல்கலைக் கழகத்தின் நலன் கருதி அரசின் இம்முயற்சியை நிறுத்த பல்கலைக் கழகம் தக்க நடவடிக்கை எடுப்பது நலம்.

இருதய நோய் - தடுக்கும் வழிமுறைகள்

பழனி. அரங்கசாமி
மதுரைப் பல்கலைக்கழகம்

அண்மைக் காலத்தே மிக அதிகமாகக் காணப்படும் மாரடைப்பு நோயிலிருந்து ஓரளவாவது நம்மைக்காத்துக் கொள்ளுதல் நன்று. மூச்சுவிட இயலாமல், திணறல் ஏற்பட்டு, மருத்துவ உதவி கிடைப்பதற்குள் தாங்கமுடியாத நெஞ்சுவலியினால், திடீரென்று வியர்த்து இருதயம் நின்று விடுவதையே 'மாரடைப்பு' என்கிறோம். நூறு ஆண்டுகளுக்கு முன்னெல்லாம், வயது முதிர்ந்தோரே இருதய நோயினால் பாதிக்கப்படுவர்.

''இன்றைக் கிருப்பாரை நாளைக் கிருப்பரென்று
எண்ணவோ திடமில்லையே''

என்றும், வாழ்க்கை ''நீரிற்குமிழி யென்ன திற்கின்ற தென்ன நான்'' என்றும் நிலையாமை பற்றி வருகின்ற அடிகளின் கூற்றில் பொதிந்துள்ள உண்மையினை வேறெந்த நோயினையும் விட மாரடைப்பே முற்றிலும் நிரூபித்து விடுகிறது.

இற்றைநாட்களில் முப்பது வயதுக்கு மேற்பட்ட யாரும் தம்முடைய வாழ்நாளைக் கணித்துக் கூற இயலாத அளவிற்கு இந்நோய் மலிந்து காணப்படுகிறது. இதற்குரிய காரணங்கள் யாவை? கொழுப்புச் சத்துடைய உணவு, அதிகப்படியான உப்பு ஆகியவற்றை உட்கொள்ளுவதோடு புகையிலை போடுதல், புகைத்தல் போன்ற கெட்ட பழக்கங்களும் இருதய நோய்க்கு ஏதுவாக அமைகின்றன. உடம்பைப் பெருக்க விடுதல், உடற்பயிற்சியோ, கடினமான வேலையோ செய்யாதிருத்தல், அளவுக்கு விஞ்சிய பதட்டம், ஆத்திரம், கோபம் கொள்ளுதல் ஆகியனவும் மாரடைப்புக்குக் காரணம் என்பது மருத்துவ அறிஞர்களின் கருத்து. அமெரிக்காவில் மாரடைப்பினால் இறப்போரின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது என்று கணக்கிட்டிருக்கிறார்கள். புகைக்கக்கூடாது; கொழுப்புச் சத்துள்ள உணவைத் தவிர்க்க வேண்டும்; உடல் பருமனைக் குறைக்க வேண்டும் என்றெல்லாம் பொதுமக்களிடையில் தீவிரமாக அங்கே பிரச்சாரம் செய்யப்படுகிறது.

பால், வெண்ணை, முட்டை, மாமிசம், சிலவகை மீன்கள் ஆகியவற்றில் உடல் வளர்ச்சிக்குத் தேவையான புரோட்டீன் சத்து

நிரம்பக் கிடைக்கிறது. ஆனால் இவற்றை அதிக அளவில் உண்ணும்போது இவற்றில் அடங்கியுள்ள கொழுப்புச் சத்தும் நம் உடலில் சேர்ந்து விடுகிறது. இருதயத்துக்குத் தூய இரத்தத்தை எடுத்துச் செல்லும் இரத்தக் குழல்களின் (arteries) உட்புறத்தில் சாம்பல் பூசியது போன்று கொழுப்புப் படிந்துவிடும். இதனால் இரத்தம் செல்லுதற்குரிய வழி (arteriosclerosis) குறுகலாகி விடுகிறது. சில சமயங்களில் உடல் முழுவதற்கும் தேவையான இரத்தம் இக்குழாய்களின் வழியே தள்ளப்படும்போது இருதயம் தனது சக்திக்கு மீறி வேலை செய்ய வேண்டியுள்ளது. இதுவே நெஞ்சுவலி. இதனால் சில சமயங்களில் இரத்தக் குழல்கள் கூட விண்டு விடுவதுண்டு. உணவில் பால், வெண்ணை கலவாது உண்ண முடியவில்லையென்றால், செயற்கை வெண்ணை (margarine), பதப்படுத்தப்பட்ட பால் (Skimmed milk) ஆகியவற்றை மாற்றாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். இவற்றில் கொழுப்புச் சத்து மிகக் குறைவு.

இரண்டாவது உலகப்போருக்கு முன்னால், ஜப்பானிய சமுதாயத்தில் மிக உயர்ந்த நிலையில் இருந்தோரே உடல்பருக்க உண்டு, இதயநோய்க்கு ஆளாயினர். இன்றைய ஜப்பான் செல்வ வளம் மிகுந்த நாடாக இருப்பதனால், கொழுப்புச் சத்து மிக்க மேற்கத்திய உணவு வகைகளை அனைவரும் விரும்பி உண்கிறார்கள். எனவே சமுதாயத்தின் எல்லா மட்டங்களிலும் இருதய நோய் அங்கே பரவலாகக் காணப்படுகிறது. வயது ஆக ஆக இருதயத்துக்கு அதிகப் பளுவைக் கொடுக்காமல், சீரான உணவு உட்கொண்டு, அமைதியாக வாழ்நாளை நீட்டித்துக் கொள்ளவேண்டுமாயின், உப்புச் சத்தையும் குறைக்கவேண்டும். எந்தவகை உணவு உண்ணுகிறோம் என்பது பழக்கத்தைப் பொறுத்தது. அதே போன்று உணவில் உப்பு இன்றியமையாதது அல்ல. அதுவும் ஒரு வகைப் பழக்கம் தான். அதனைக்குறைத்துக் கொண்டே வந்து, ஒரு சமயத்தில் உணவிலிருந்து முற்றும் அதனை நீக்கி விட்டால், உடலுக்கு அதனால் கெடுதல் ஒன்றும் இல்லை. உடல் வளர்ச்சிக்குத் தேவையான சிறிதளவு உப்புச்சத்து இயல்பாகவே நாம் உண்ணும் காய்கறிகளிலேயே கிடைத்து விடும். இயற்கை மருத்துவர்கள் கூட (Naturopathis) புளி, காரம் ஆகியவற்றோடு உப்பும் விலக்கத்தக்கது என்று கூறுவதை ஈண்டு மனத்திற்கொள்ள வேண்டும்.

வாழ்க்கையில் ஒரு கட்டத்திற்குப் பிறகு உப்புச்சத்து இரத்தக் கொதிப்பினை உண்டு பண்ணக் கூடியது. எனவேதான், ஊறுகாய், கருவாடு, உப்பிட்ட இறைச்சி ஆகியவற்றை முற்றிலுமே ஒதுக்கி-விடுமாறு மருத்துவர்கள் அறிவுரை வழங்குகின்றனர்.

புகைப்பிடித்தலுக்கும் இதய நோய்க்கும் நேரடியான தொடர்பு இல்லை. தொடர்ந்து சிகரெட், சுருட்டு, பீடி இவற்றைப் புகைப்பத-னால் நுரையீரல் பாதிக்கப்படுகிறது. வலிமை குறைந்த நுரையீரல் உடலுக்குத் தேவையான தூய காற்றை இரத்தத்தினூடு போதிய அளவு செலுத்த முடியாது. இதனால் உடலின் பல்வேறு பகுதி-களுக்கும் தேவையான நல்ல இரத்தத்தை அனுப்பும் பணியை இருதயமே ஏற்றுச் செயல்படவேண்டியுள்ளது. இதயத்துக்கு இது அதிகப்படியான வேலை தானே! மேலும் புகையிலையில் அடங்கி-யுள்ள இராசயனப் பொருள்கள் இரத்தக் குழல்களைச்சுருங்கச் செய்-கின்றன. இதனாலும் இருதயத்தின் பணியும், பளுவும் அதிக-மாகின்றன. இதயத்தை வலிவுறச் செய்கின்ற (lippoprotein) ஒரு வகை புரொட்டீன்களை மனித உடல் தானே தயாரித்துக் கொள்-கிறது. புகையிலை போடுவதும், புகை பிடிப்பதுமாகிய கெட்ட பழக்கங்கள் மனித உடலின் இந்த இயல்பான ஆற்றலைத் தடுத்து விடுகின்றன. இவை யாவற்றுக்கும் மேலாக, புகை பிடிப்பதனாலே நமக்கு என்ன நன்மை? பழக்கத்துக்கு அடிமையாகின்ற இந்த பரிதாப நிலையைத் தவிர்த்து விட்டால், ஒரு தொந்தரவும் இல்லை என்பதை நாம் உணர வேண்டும்.

ஆயுட்காலம் குறுகுவதற்குரிய காரணங்களில் உடல் பருமனும் ஒன்றாகும். அன்றாடம் வாயாரச் சுவைத்து, அமிதமாக உண்டு, பகலில் தூங்கினால், சில நாட்களிலேயே உடல் பெருக்கத் தொடங்கி விடும். எனவே பகலில் தூங்குவதை நிறுத்திவிட வேண்டும். உட்-கார்ந்தே பணி புரிவதும் ஒரு வகையில் உடல் சதையைப் பெருக்கி விடும். இவை அனைத்தையும் தவிர்ப்பதற்குரிய ஒரே வழி உடற் பயிற்சி செய்வதுதான். உடல் நலம் இல்லாதிருப்போரும், வயது முதிர்ந்தோரும் அரைமணி நேரமாவது நடக்க வேண்டும். மிதமான உணவும், தவறாத உடற்பயிற்சியும், நமக்கு உடல் வலிவும், மனத் தெளிவும் கொடுப்பதோடன்றி வனப்பையும் பொலிவையும் அளிக்கும். மேலும் தொடர்ந்து உடற்பயிற்சி செய்வதனால், உடம்பில் இருக்கும் தசைநார்கள் மெலிவடையாமலும் தளர்ச்சியுறாமலும்

உரம் பெற்று நிற்கும். நாற்பது வயதைத் தாண்டியோருக்கு நடைதான், சிறந்த உடற்பயிற்சி. நெஞ்சை நிமிர்த்திக், கையினை வீசி, இயன்றவரை வேகமாக நடந்தால், குருதியோட்டம் விரைவு-படுத்தப்படுவதோடு, இதயத்துடிப்பும் சீராக அமையும்.

அதிகமாகக் கவலைப்படுதலும், கோபம், படபடப்பு, ஆத்திரம் கொள்ளுதலும் இரத்த அழுத்தத்தை அதிகப்படுத்துவன. திருவள்ளுவரும், 'சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி' என்று கூறுவதோடு,

''சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந் தான்கை பிழையா தற்று''

என்றும் சினத்தின் கொடுமையினைச் சுட்டிக்காட்டுவார். தனக்கும் பிறருக்கும் அமைதியின்மையை உண்டுபண்ணும் வகையில், ஆத்திரப்-பட்டுக் கோபம் கொள்ளுவதைவிடக் கடமையினை நயம்பட நினை-வூட்டித் தக்காங்கு எச் செயலையும் செய்வது ஒரு சாதனை அல்லவா!

இதய நோயினைக் குணப்படுத்துவதற்கென்று உடனடியான மருந்து ஒன்றும் கிடையாது. ஆங்கில மருத்துவ முறையில் நெஞ்சு வலி ஏற்பட்டவுடனே, தூக்கமாத்திரை கொடுத்து அசையாமல் படுக்கச் செய்து விடுகிறார்கள். ஐசார்டில் (Isordil) மாத்திரை கொடுக்கலாம் என்று சில மருத்துவர்கள் கூறினாலும், இது கடுமையான தலைவலியை உண்டுபண்ணுகிறது. நோய் வந்த-வுடன் குணப்படுத்துதற்குரிய மருந்து சித்த மருத்துவ முறையிலும் இல்லை. ஆயினும் முன்னெச்சரிக்கையாக ஒரு பயிற்சி செய்வது நல்லது. ஆட்காட்டி விரலால் இரண்டு காதுகளின் துவாரங்களையும் அடைத்தவாறு கண்களையும் இறுக மூடிக்கொண்டு, மனத்தினை ஒருமைப்படுத்தித் தியானத்தில் அமர்வது போல் அரைமணி நேரமாவது, இரவு படுக்கைக்குப் போகுமுன் அன்றாடம் செய்தால், ஓரளவு இதய நோயினைத் தடுக்க முடியும். 'காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்குக் கூற்றை உதைக்கும் குறியதுவாமே' என்பது திருமூலர் வாக்கு இதயம் வலிவு பெறவும், இரத்த அழுத்தமிருப்-பின் அதனைத் தடுக்கவும் இப்பயிற்சி துணை புரியும்.

மனித வாழ்க்கை நிலையற்றதுதான். ஆயினும் உலகில் வாழ்கின்ற காலம் வரையிலும், 'மக்களொடு மகிழ்ந்து மனையறம் காத்து' அமைதியாக இயற்கையுடன் கலத்தல் நன்று. எனவே சீரான உணவும், நல்ல உள்ளமும், இனிய பழக்கங்களும் கைவரப் பெற்ற ஒரு சிறந்த வாழ்க்கை முறையினை நாம் அமைத்துக் கொள்ள வேண்டும்.

சிந்து வெளி நாகரிகம்

—சில புதிய செய்திகள் ;

— அசாமி

திராவிடரின் பழங்கால உன்னதமான வாழ்வைப் பறை சாற்றுவதாகக் கருதப்படும் சிந்து வெளி நாகரிகச் சான்றுகள் புதைபொருள் ஆய்வாளர்களால் கண்டு பிடிக்கப்பட்டனவாகும். பஞ்சாப் மாநிலத்தில் மாண்டகோமரி என்னுமிடத்திற்கு அருகில் ஹரப்பாவும், சிந்து மாநிலத்தில் லர்கானா மாவட்டத்தில் மொகஞ்சோ-தரோவும் அமைந்துள்ளன. (இந்த இரண்டு இடங்களும் தற்போது பாகிஸ்தானில் இருக்கின்றன.) இங்கு வாழ்ந்த மக்களின் நாகரிகம் ஆரிய காலத்திற்கு முற்பட்டதாகும் என்பது லாங்டன் போன்ற வரலாற்று ஆசிரியர்களின் கருத்து.

கிறித்துவின் பிறப்புக்கு மூவாயிரம் ஆண்டுகள் முன்னதாகக் கருதப்படும் இந்நாகரிகச் சின்னங்களை அகழ்ந்தெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டவர் பலராவர். இருப்பினும் ஜான் மார்ஷல் என்னும் ஆங்கிலேயரும், பானர்ஜி என்னும் வங்காளியுமே முதன்முதலாக 1922 ஆம் ஆண்டு இப்பணியினைத் தொடங்கினர். அண்மைக் காலம் வரையில் ஏறத்தாழ எண்பது இடங்களில் அகழ்வு செய்யப்பட்டுள்ளது. கராச்சியிலிருந்து மேற்கே முன்னூறு கல் தொலைவில் அராபியப் பெருங்கடலை ஒட்டி அகழ்ந்தெடுக்கப்பட்ட இந்த இடங்களை இன்றும் காணலாம்.

புதையுண்ட மட்பாண்டங்கள், கற்கள் ஆகியவற்றின் மீது காணப்படும் எழுத்துகளை யாராலும் புரிந்து படிக்க இயலவில்லை; எனினும், சிந்து வெளி மக்கள் எழுதப்படிக்கத் தெரிந்திருந்தனர் என்பது மட்டும் உறுதி.

இலிங்க வழிபாடும், மூன்று முகங்களை உடைய சிவன் வணக்கமும் அக்காலத்தில் இருந்ததென்று தெரிகிறது. அகலமான தெருக்களும், தானியக் களஞ்சியங்களும், நீண்ட வராந்தாக்களைக் கொண்ட பெரிய முற்றங்களும் இருந்ததை நோக்கும் பொழுது, கட்டிடக் கலை உணர்ந்த ஒரு மேன்மையான வாழ்க்கை நிலை அப்போது அங்கு இருந்ததை உணர முடிகிறது. கத்தி, கோடரி,

அரிவாள் போன்ற ஆயுதங்கள் புழக்கத்தில் இருந்தன. இரும்பினால் செய்யப்பட்ட ஈட்டி, உடைவாள், அம்பு, வில் ஆகிய போர்க் கருவிகளையும் சிந்து வெளி மக்கள் பயன்படுத்தி வந்துள்ளனர். பழங்காலத்திலேயே நாகரிகமாக வாழ்ந்த இவரது கலாச்சாரம், மொழி ஆகியன பற்றி வரலாற்று அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு-கள் உள்ளன.

தோண்டியெடுக்கப்பட்ட பொருள்களில் காணப்படும் எழுத்துகள் இந்தோ—ஆரிய வகையினைச் சார்ந்தவை என்பது எஸ். ஆர். ராவ் கருத்து. தமிழ்மொழி உள்ளிட்ட திராவிட மொழிகளோடு அம்மொழி தொடர்புடையது என்று புனாவில் வாழ்ந்து வந்த ஹீராஸ் பாதிரி-யார் கூறுகிறார். நேரு நினைவுப் பரிசினைப் பெற்ற ஐராவதம் மகாதேவனுக்கும் இக்கருத்து உடன்பாடே.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் நிலவிய திராவிட நாகரிகத்-தின் இந்த வரலாற்றுச் சின்னங்களுக்கு இப்போது ஒரு பேராபத்து நிகழ்ந்து கொண்டுள்ளது. தோண்டியெடுக்கப்பட்ட சின்னங்கள் உப்பு நீர் படிந்து இடிந்து விழும் நிலையில் உள்ளன. அப்படியே விட்டு விட்டால், இருபது அல்லது முப்பது ஆண்டுகளில் அனைத்தும் அழிந்து விடும். கடல் நீர் ஊற்றெடுத்து நில மட்டத்திற்குக் கீழே ஐந்து, ஆறு அடி ஆழத்திற்கு நிறைந்து விடுகிறது. வெப்ப காலத்தில் உப்பு நீர் ஆவியானதும், உப்புப் படிவங்கள் கீழே தங்கி விடுகின்றன. இதனால் அகழ்ந்தெடுக்கப்பட்ட சுவர்கள், முற்றங்கள் காலப் போக்கில் முற்றும் அழிந்து விடும் நிலையில் உள்ளன. இதனைத் தவிர்த்து, சிந்துவெளி நாகரிகச் சின்னங்களைக் காப்பாற்ற பாகிஸ்தானிய அரசினர் முயற்சி எடுக்கின்றனர். வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்கும் பணிக்கென்று அகில உலக மட்டத்தில் ஒரு குழுவினர் நியமிக்கப் பட்டுள்ளனர். வாஷிங்டன் நகரைச் சார்ந்த பால் பெராட், யுனெஸ்கோ (UNESCO) நிறு-வனத்தில் பணிபுரியும் ஜான் பாப்பிலர் ஆகிய இருவரையும் உறுப்-பினராகக் கொண்ட இக்குழுவின் தலைவர் பாகிஸ்தானில் உயர்நீதி-மன்ற நடுவராக இருக்கும் அப்துல் காதர் ஷெய்க் என்பார். பாது-காக்கும் பணிக்கு வேண்டிய செலவுத் தொகையினை உலகின் பல்வேறு நாடுகள் கொடுத்து உதவுகின்றன. காலப் போக்கில் 16 மிலியன் டாலர் (14 கோடியே 40 லட்சம் ரூபாய்) செலவு ஆகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

அகழ்வுச் சின்னங்களில் உப்புநீர் ஊற்றெடுக்காமல் இருப்பதற்காக நிலத்தடி நீர் உறிஞ்சி எடுக்கப்படவேண்டும். இதற்கென்று ஐம்பதுக்கு மேற்பட்ட ஆழ்துளைக் கிணறுகள் (tube wells) தோண்டப்பட உள்ளன. இவைகளிலிருந்து வெளியேற்றப்படும் நீரைக் கொண்டு செல்வதற்கென்று பதினாறு மைல் நீளத்தில் பெரிய கால்வாய் ஒன்றும் வெட்டப்படுகிறது. இதுகாறும் பழுதுபட்டிருக்கும் பல்வேறு பகுதிகளைச் செப்பனிடும் பணிகளும் தொடர்ந்து நடைபெறுகின்றன. இச்சின்னங்களை முழுவதுமாகப் புகைப்படம் எடுக்க இருக்கின்றனர். தரைமட்டத்திற்குக் கீழே இருக்கும் அகழ்வுச் சின்னங்களை தரையில் நின்றவாறே புகைப்படம் எடுப்பது இயலாதல்லவா? அதற்கென்று ஒரு புதிய முறையைக் கையாள இருக்கின்றனர்.

சூடான காற்று நிரப்பப்பட்ட மிகப்பெரிய பலூன் ஒன்று விண்ணில் மிதக்கும். காற்றின் போக்கில் திசைமாறி விடாமேல் இருப்பதற்காக, அந்தப் பலூனைத் தரையுடன் சேர்த்து வலுவான கயிறுகளால் இறுக்கிக் கட்டி விடுவர். ஏற்கனவே அந்தப் பலூனுக்கு உள்ளே பொருத்தப்பட்டிருக்கும் புகைப்படக் கருவிகளும், ஏனைய எந்திர சாதனங்களும் தரையிலிருந்தவாறே (remote control) இயக்கப்படும். ஜெர்மானிய கட்டிடக்கலை வல்லுநரான டாக்டர் மைக்கேல் ஜான்சன் தலைமையில் புகைப்படம் எடுக்கும் பணிகள் நிறைவேற்றப்பட உள்ளன.

வரலாற்றுப் புகழ்படைத்த சிந்து வெளி நாகரிகச் சின்னங்களை சுற்றுலா வரும் பொதுமக்கள் காண்பதற்கென்று பேருந்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் ஒரு கிணறு இன்றுவரை வற்றிவிடவில்லை. தண்ணீரைச் சுவைத்துப் பார்ப்பதற்காக ஒரு கயிறும் தோல்பையும் அங்கு இருந்தாலும், அந்த நீரைக் குடிக்கக் கூடாதென்று அரசினர் எச்சரிக்கை செய்துள்ளனர். நீரின் தன்மை கெட்டு, நச்சு நீராக மாறியிருக்கக் கூடும் என்ற அச்சமே இவ்வேண்டுகோளுக்குக் காரணம் ஆகும்.

பழங்கால நாகரிகச் சின்னங்கள் எங்கிருந்தாலும், ஒருவகையில் மனிதகுல மேம்பாட்டையும் கலாச்சாரத்தையும் சுட்டிக் காட்டும் தன்மையன. எனவே தான் ஐக்கிய நாடுகளின் சபையும் இத்தகு பணிகளுக்குப் பொருள் உதவி புரிகிறது. எகிப்து நாட்டில் நைல்

நதியைத் தடுத்து அஸ்வான் அணை கட்டும்போது ஆபு சிம்பல் கோபுரங்களும், சிற்பங்களும் நீரில் மூழ்கி அழிந்து விடும் ஆபத்து ஏற்பட்டது. அச்சின்னங்களை அப்படியே பெயர்த்து எடுத்து, வேறோர் இடத்தில் நிறுவும் செலவினையும், பணிகளையும் யுனெஸ்கோ ஏற்றுக் கொண்டது. திருவரங்கத்தில் உள்ள அரங்கநாதப்பெருமான் கிடந்த கோலத்தில் இருப்பதை சிலப்பதிகாரம் எடுத்தியம்புகிறது. மிகவும் தொன்மை வாய்ந்த சீரங்கம் கோவிலும் யுனெஸ்கோ ஆதரவில் புதுப்பிக்கப்படுகிறது என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும்.

புதுக்கவிதை

நூல் — பர்ணசாலை மான்கள்
படைப்பு—சேவற் கொடியோன்
ரோஹிணி வெளியீடு
ரோஹிணி பதிப்பகம்,
கவுண்டம் பாளையம்
கோவை—30
மதிப்பு - ஏழு ரூபாய்கள்

தொட்ட இடமெலாம் தட்டுப்படுகின்ற
மங்கை நல்லாளின் மரகத அணைப்பில்
தேவசுகம் கண்ட தீந்தமிழ்க் காளையின்
விரக தாப வேதனைப் புலம்பலிது!
மழைக் கண் பார்வையாள்!
மாந்தளிர் மேனியாள்!
பேசும் பொற் சிலை!
அவளை அடிமுதல் முடிவரை
ஆரச் சுவைத்த
ஆணழகன் பேசுகின்றான்.
ஆனாலும் சோர்வில்லை.
சொல்லில் அடங்காத மன்மதக் கலையில்
சோர்வேது! சுவையே தான்!
செயலாலே முடியாத சீவனற்ற காலத்தும்
எண்ணவே இன்பந்தரும் கண்ணான கலையலவா!
புதுக்கவிதைப் புலம்பலிலே
மிடுக் கிருப்பின் வனப்பில்லை
ஓசையுண்டேல் உயிரில்லை
என்றெண்ணிப் பலபேசி
ஈவிரக்கம் காட்டா என்னை
அனலாய் உருக்கிய அழகான கவிதையிது!
குறியீட்டுப் பெண்ணாய்
சொல்லழகுச் செல்வியாய்

இதயக் கழுத்தை எட்டிப்பிடித்துக்
கட்டி முத்தமிட்ட கவிதை மான்களிவை!
கார் முகில் கூந்தலும் நரைப்பதுண்டு!
கண் கவர் மதியிலும் களங்க முண்டு!
இரு 'மான்'களிலும் சில மறு வுண்டு!

ஜாதி நெருப்பை அவித்து
அந்தஸ்துத் தளைகளை உடைத்து
வாழ்க்கையை வாஸ்தவமாக்கலாம்
பக்கம் : 12

தென் பொதிகைச் சாந்திருக்கத்
திசை மாறி அரளி சூடி
பூத்துக்குலுங்குவதாய்ப் பொங்கி நிற்கின்றாய்!
நானோ புழுங்கிக் குமைகின்றேன்!

நான் — நான் மட்டுமே
செண்பகக் காம்பால்
தாமரை யிதழில்
தாளமிட வேண்டும்
பக்கம்.25

காம்பினால் தாளமிடும் கலையெனக்குப் புரியவில்லை!
புரியாத சொற் கூட்டு பொருளற்றுப் போனதுவே!
பொருளில்லாத வெற்றுச் சொல்
நீரில்லாத ஊருணியே
நிலையில்லாத நெடுஞ்சுவரே!
குணம் நயந்து குற்றமும் நாடினேன்
கருத்துகள் நிறைந்து களிப்பினை ஈந்தன!
குறைகள் மறைந்து குணங்கள் நிறைந்தன!
சுவைகள் மலிந்து நயங்களை நல்கின!
சேவற் கொடியோனின் செந்தமிழ்க் கவிதையிது!
பாக்கள் படைப்போரும் பாராட்டுந் தன்மையது!

—பழநி. அரங்கசாமி.

ஆண்டாள் பாசுரங்களில் புராணம்

டாக்டர் சு. வேங்கடராமன்,
மதுரைப் பல்கலைக் கழகம்,

முன்னுரை:

இறைவனால் மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களுள் தனிச்சிறப்புடையவர் ஆண்டாள். அவர் பாடிய பாசுரங்கள் 173 ஆகும். அவை திருப்பாவை முப்பது பாடல்களும் நாச்சியார் திருமொழி 143 பாசுரங்களும் ஆகும். இவற்றில் புராணம் இடம்பெறுமாற்றை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது. புராணம் என்ற சொல் (Myth) என்பதற்கு இயைபுடையதாக இக்கட்டுரையில் ஆளப்படுகிறது. பழமரபுக்கதை (Myth) என்பது சமயம் சார்ந்துவரும்போது புராணம் என்றாகிறது.

புராணம்-சொல்-விளக்கம்:

'மத நம்பிக்கைகளை விளக்குதற் பொருட்டு எழுந்த கதைகள் புராணம் எனப் பெயர் பெறும். இவற்றைப் படைத்த ஆசிரியர் பெயர் அறியப்படாத அளவு இவை தொன்மை வாய்ந்தவை' என்று விளக்குவர். வேதங்கள் ஒருசிலரால் படிக்கப்பட, புராணம் அனைவர்க்கும் பொதுவாக, கிராமங்கள் தோறும் பொதுமக்களால் படிக்கப்பட்டு வந்துள்ளன. பொதுமக்களுக்குரிய வைதிக சமய நூல்களாக விளங்கியவை புராணமே. இலட்சியங்களுக்கு உதாரணம் கூறுவதே புராணம். அதாவது வேதத்திற்குப் பூதக்கண்ணாடியாக அமைய வல்லது புராணம். கதைகளின் வாயிலாக உயரிய குறிக்கோள் பேசப்பட்டது. பெரும்பாலும் புராணங்கள் உலகத் தோற்றம், ஒடுக்கம், மனுவந்தரம், முனிமரபு, அரசமரபு என்ற ஐந்து இலக்கணங்களை உடையன. உலக மொழிகள் பலவற்றிலும் புராணம் என்று சொல்லும்போதெல்லாம் உலகத் தோற்றம், ஒடுக்கம் என்ற கூறுகளை உள்ளடக்கியே கூறும் பாங்கு காணப்படுகின்றது. கடவுளர் அல்லது பெருவீரர்கள் இவர்களை மையமிட்டு இயற்கையிகந்த நிகழ்ச்சிகள் பல இடம் பெறுமாறு புராணக் கதைகள் தோன்றின.

வடமொழியில் புராணம்:

வேதங்களை அடிப்படையாகக் கொண்ட வைதிகசமயங்களில் புராணங்கள் மிகுதியும் தோன்றின. வடமொழியில் புராணங்களை மகா புராணங்கள், உபபுராணங்கள், அதிபுராணம் என்று பகுத்தனர். மகாபுராணங்கள் பதினெட்டு எனவும், இவற்றைத் தொகுத்து அருளியவர் வேதவியாசர் எனவும் கூறப்படுகிறது. புராணங்களில் கடவுளர் பற்றிய கதைகள் காலந்தோறும் வளர்ந்து கொண்டே வந்தன.

தமிழில் புராணம்:

தமிழில் புராணம் என்பதைப் பலவாறாகப் பகுத்துக் காண்பர். பழமையான வடமொழிப் புராணங்களைத் தமிழில் மொழி பெயர்த்தும், புதுவன புனைந்தும் உருவாக்கிய புராணங்கள் ஒருவகை; கந்த புராணம், பாகவதம், மச்ச புராணம், கூர்ம புராணம் என்பன இவ்வகையின. சான்றோர் வரலாற்றை எடுத்துக் கூறுவனவும் புராணம் எனப் பெயர் பெற்றன. பெரிய புராணம், திருவாதவூரடிகள் புராணம் என்பன இவ்வகையின. இனி, மூன்றாவதாகத் தல புராணங்கள் அமையும். தல புராணங்கள் தனி ஒரு இலக்கிய வகையாகப் பல்கிப் பெருகின; நதிகளைப் பற்றியும் புராணங்கள் தோன்றின. சைவ, வைணவ, சமண மதத்தினர் புராணங்களைப் படைத்தனர். பின்வந்த இஸ்லாமியரும் புராணம் என்ற சொல்லாட்சி அமைப்பை-மரபைப் பின்பற்றிச் சீறாப் புராணம் படைத்தனர். புராணம் என்பது தொன்மையானது என்ற அளவில் பயன்பட்டு வந்தமையை இதனால் அறியலாம். சமயம் சார்ந்த நோக்கில் காண்பது அவற்றின் அடிப்படையைப் புரிந்து கொள்ள உதவும். இந்த சமயப் பேரறிஞர்களும், ஞானிகளும் புராணங்களின் தத்துவ உண்மைகளைப் போற்றி வந்துள்ளனர். இலக்கிய வெளியீட்டுக் கருவியாகவும் புராணம் செயல்படுகின்றது. புராணக் கதைகள் உவமைகளாக, உருவகங்களாக அமைவது அத்தகைய நிலை.

பல்லவர் காலத்தில் தமிழகத்தில் சமண பௌத்த சமயங்களின் செல்வாக்குக் குன்றி மீண்டும் சைவ வைணவ சமயங்கள் செல்வாக்குப் பெற்றன. நிலையாமை பற்றிய கருத்துக்களும் கடும் துறவறம் போன்ற கடைப்பிடிக்க இயலாத கட்டுப்பாடுகளும்

உலகியல் வாழ்க்கை, (காதல், இல்லறம், கலைகளை அனுபவித்தல் போல்வன) எதிர்ப்பும் சமண, பௌத்த மதங்கள் செல்வாக்குக் குன்றக் காரணமாயின என்பர். இவற்றை ஆதரித்தும் வலியுறுத்தியும் பேசிக் கொண்டு தமிழரின் தொன்மையான நெறியையும் வடநாட்டு வைதிக சமய நெறியையும் உள்ளடக்கிச் சைவ வைணவ மறுமலர்ச்சி இயக்கமாகப் பல்லவர் காலப் பக்தி இயக்கம் வளர்ந்தது. சமயக் கொள்கைகளைப் பரப்பச் சைவம், வைணவம் ஆகிய இரண்டுமே புராணக் கதைகளை மிகுதியும் வழங்கத் தலைப்பட்டன. தொன்மை-யான புராணக் கதைகள் மாத்திரமின்றி, தலபுராணக் கூறுகளும் அடியார் வரலாற்றுச் செய்திகளும் இடம் பெறலாயின. பின்னால் தமிழில் தலபுராணம் என்னும் தனியொரு இலக்கிய வகை தோன்றக் கூடிய வித்தினை ஆழ்வார், நாயன்மார் பாசுரங்களிலே காண்கி-றோம். தாம் அனுபவித்த இறை அனுபவத்தை இறை வட்டத்தில் நின்று பொது மக்களுக்கும் எடுத்துக் கூறினர் இவர்கள். அப்படிக் கூறும்பொழுது பொது மக்களின் மொழி, இலக்கிய வடிவம், இசை, பழைய மரபு, புதுமை, நாட்டுப்புறக் கதைகள், புராண மரபுகள் ஆகிய பலவற்றையும் உள்ளடக்கி இவற்றைப் பொது-மக்கள் இலக்கியமாக ஆழ்வார்களும் நாயன்மார்களும் வளர்த்தனர். சங்ககாலத்தில் காணப்பட்ட புராணக் கதைகள், கடவுளர் வடிவங்கள் என்பவற்றுடன் கூட வேறுசில வழக்காறுகளையும் இவர்கள் பாடல்-களில் காண்கிறோம். அருளாளர் காலத்தில் வழக்கில் இருந்-தவையாக அவற்றைக் கொள்ளவேண்டும். அருளாளர் பாடல்களில் சமயக் கருத்துக்களே முதன்மை பெறுவதால் கடவுளர் பாட்டுடைத் தலைவர் ஆவதால் புராணத்தின் பயன்பாடு மாற்றம் பெறுகிறது. இறைவன் புகழ்பாடும் நோக்கிலே புராணம் ஆளப்படுகிறது. வாழ்வில் நம்பிக்கை ஊட்டுவதாக அவை அமைகின்றன. கடவுளரின் வீரதீரச் செயல்களையும் அருள் திறத்தையும் புலப்படுத்த அவை வெளியீட்டுக் கருவிகளாகின்றன. மானிடரைப் பாடாது, இறைவனைப் பாடும் இவர்கள், தலைவன் புகழ்பாடும் புறநெறி-யையும், அன்பின் ஐந்திணை அகநெறியையும் ஏற்று இறைப் பெருமையைப் பாடினர். மானுடக் காதலுக்கென்று அமைந்த அகமரபுகளைக் கடவுட் காதலுக்குப் பயன்படுத்தினர். இறைவனை, நாயகனாக்கித் தங்களை நாயகியாகப் பாவித்து ஆழ்வார், நாயன்மரர் பாடிய நாயக-நாயகி பாவப் பாடல்கள் பழைய அகப்பொருள் மரபின் வளர்ச்சிதான் இப்பாடல்களிலும் புராணம் இடம்பெற்றன. உணர்ச்சி மேலோங்கிட இப்பாடல்கள் படிப்போரை ஈர்க்கவல்லன.

கண்ணன் பிருந்தாவனத்தில் - ஆயர்பாடியில் - கோபியர்களுடன் ஆடியமை ஆழ்வார்களைப் பெரிதும் ஈர்த்தது. கண்ணன் புரிந்த இந்த ராசலீலைகள் இவர்களுக்குப் பாடுபொருள் ஆயின. பாகவத புராணம், விஷ்ணுபுராணம் போன்றவற்றில் இடம்பெற்ற புராணக் கதைகள் மட்டுமன்றி, மிகப் பழமையான இலக்கியங்களான விஷ்ணு புராணம், ஹரிவம்சம், பாகவத புராணம் இவற்றில் இடம்பெறாமல் தமிழ்ப் புராண வழக்காகத் தமிழ் மண்ணில் மட்டும் நடமாடி, அகநானூறு, புறநானூறு, சிலம்பு ஆகியவற்றில் இடம்பெற்ற சில புராணக் கதை நிகழ்ச்சிகளும் ஆழ்வார்களைக் கவர்ந்தன. இவ்வாறு, இப்புராணச் செய்திகளைப் பாடுவதால் இவர்கள் தம் அநுபவத்தை வெளிவிடுவதற்கு மக்கள் அறிந்த கதைகளை எடுத்துக்கூறி அவற்றை வெளியீட்டுத் திறனாக ஆக்கினர். அத்துடன், மானைக் கொண்டு மானைப் பிடிப்பாரைப் போல, மக்களிடையே பெருவழக்காயிருந்த புராணக் கதைகளைக் கூறி, மக்களிடையே புராணக் கதைகளின் உள்ளீடான சமயச் சிந்தனைகளையும் நீதிகளையும் வலியுறுத்தினர். எனவே, இவர்கள் பாடல்களில் புராணம் இடம் பெறுகையில் வெறும் இலக்கிய வெளியீட்டு வாயிலாக அமையாது, அப்பாற்பட்டு, உண்மைகளாக அவை அமைகின்றன. ''புராணம் என்பது குறியீடோ உருவகமோ, முற்றுருவகமோ அன்று. அது உண்மை அநுபவம்; இறை அனுபவம் கூறுவது'' என்னும் அரவிந்தரின் கருத்து இங்கு வலிமைபெறக் காண்கிறோம். ''துயரமிக்க மனிதவாழ்வின் நிலையை உயர்த்துவதற்கும் இன்பமிக்க வீடுபேற்றை நல்குவதற்கும் மரண-மிலாப் பெருவாழ்வு பெறுவதற்கும் வழிகாட்டும் வண்ணம் இறைவனின் அவதாரங்களும் அவனைப் பற்றிய புராணக் கதைகளும் விளங்குகின்றன'' என்று மக்கள் நம்பலாயினர். இதன் விளைவே பக்தி இயக்கக் காலத்தில் புராணம் இலக்கியத்தில் பயன்படும் பாங்கு முற்குறிப்பிட்டவாறு மாற்றம் பெற்றதாகும்.

கண்ணன் அவதாரம்:

திருமாலின் பத்து அவதாரங்களுள் கண்ணன் அவதாரம் ஆழ்வார்களைப் பெரிதும் கவர்ந்தது. பழைய காலத்தில் வீடுபேறு அடைவதற்கு யோகநிலையும், ஞான மார்க்கமுமே வழிகாட்டும் என்று நம்பினர். முக்தி பெறவும் இறைவனுடன் உயிர்கள் ஒன்றவும் இந்நெறியே சாதனம் என்று கூறப்படும்பொழுது எல்லோராலும்

பின்பற்ற முடியாததாக இது அமைந்தது. இதற்கு மாறுபட்டு, இறைவனிடம் பக்தி செலுத்துவதின் மூலம் (அவரவர்க்கு விருப்ப மான வழிபடு கடவுளிடம் பக்தி செலுத்தலாம்) முக்தி அடையலாம் என்று அறிவுறுத்தும் கீதையின் நாயகனாகக் கண்ணன் அவதாரம் அமைந்தது. இதனால் கண்ணன் அவதாரம் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. திருமாலின் அவதாரங்கள் மிகுதியும் வழிபாட்டிற்கு உரிய அவதாரமாகக் கண்ணன் அவதாரம் போற்றப்-பட்டது. கண்ணனைப் பற்றிய புராணக் கதைகள் பெருகின. காலந்-தோறும் புதிய கதைகள், கதைகளில் மாற்றங்கள் தோன்றின. அத்துடன் வடமொழி வழக்குகள், தமிழ்மொழி வழக்குகள் என்று வழக்கு வேறுபாடுகளும் கண்ணனைப் பற்றிய புராணங்களில் இடம் பெறலாயின.

ஆண்டாள் பாசுரங்களில் அவதாரச் செய்திகள்.

ஆண்டாள் பாசுரங்களுள் திருமாலின் அவதாரங்களுள் (2) கூர்மம் (2), வராகம் (1), நரசிம்மம் (1), வாமனன் (9), இராமன், (10), பலராமன், கண்ணன் (48) ஆகிய அவதாரங்கள் இடம் பெற்றுள்ளன. மச்சம், பரசுராமன், கல்கி ஆகிய மூன்று அவதாரங்கள் பற்றிய செய்திகள் இடம் பெறவில்லை. பத்து அவதாரங்களுள் அடங்காது தனித்துப் பேசப்படும் கஜேந்திர மோட்சக் கதையும் இடம் பெற்றுள்ளது. கண்ணனைப் பற்றிய புராணக் கதைச் செய்திகள் நாற்பத்தெட்டு இடங்களில் இடம் பெற்றுள்ளன. கண் ணனின் பெயர்களை விளியாகப் பயன்படுத்தும் பாங்கு முதல் பல்வேறு நிலைகளில் இடம்பெறுகின்றன. 'மானிடவர்க்கென்று பேச்சுப்படின் வாழகில்லேன்' என்று உறுதியுடன் வாழ்ந்து கண்ணனையே மணக்கவேண்டும் என்னும் பேரவா மிளிர ஆண்டாள் இப்பாசுரங்களைப் பாடியுள்ளார். புராணத்தைப் பயன்படுத்து-மிடங்களில் எல்லாம் 'கண்ணன் என்னும் கருந்தெய்வம் காட்சிப் பழகிக்கிடக்கும்' ஆண்டாளின் பெண்மன உணர்வு மீதூர்ந்து உள்ளது. கண்ணனிடம் காதல் கொண்ட தலைவியின் கூற்றாக வரும் பாடல்-களில் காதல் உணர்வை வெளிப்படுத்திடப் புராணம் இணைந்து நிற்கிறது. ஏனைய ஆழ்வார்கள் பாவனை செய்து பாடிய நிலையை, ஆண்டாள் இயல்பாகப் பாடுவதால் அவை உணர்விற்கு எல்லைநிலம் ஆகின்றன. அதனால்தான் உரையாசிரியர் பெரியவாச்சான்பிள்ளை ''புருஷன் புருஷனைக் கண்டு ஸ்நேஹிப்ப திலுங்காட்டில் ஸ்த்ரீ புருஷனைக் கண்டு ஸ்நேகிக்கை பள்ளமடை'' என்றார். தாம் வாழும்

வில்லிபுத்தூரையே ஆயர்பாடியாக எண்ணிக் கண்ணன் வாழ்ந்த காலத்தைப் படைக்கிறார். கண்ணனை இறைவனாகவும் மனித-னாகவும் காட்டுகின்ற திறன் பாராட்டற்குரியது. புராணக் கடவு-ளாகவும் முல்லைநிலத்தவனாகவும் கண்ணன் வருகிறான்.

திருமாலின் ஐந்து பெருநிலைகளும் அந்தர்யாமித்வம் (உயிர்-களில் உட்கார்ந்து நிற்றல்), பரத்வம் (மேலான நிலை), வியூகம் (பாற்கடலில் பள்ளி கொண்ட நிலை), விபவம் (அவதார நிலை), அர்ச்சாவதாரம் (கோயில்களில் எழுந்தருளியுள்ள நிலை) ஆகிய ஐந்துநிலைகளும் - ஆண்டாள் பாசுரங்களில் இடம்பெற்ற போதிலும் அவதாரங்களும் அர்ச்சையும் சிறப்பாக இடம்பெறுகின்றன. கண்ணனைப் பாடும் பொழுதும் அவனுடைய வடிவமும் நிறமும் பரக்கப் பேசப்படுவது ஆண்டாள் பாடல்களில் குறிப்பிடத்தக்க செய்தியாகும். மாயவன் வந்து உருக்காட்ட, அவன் மையலில் அகப்பட்டவளுக்கு அதை வெளியிடுகையில் அவன் வடிவும் நிறமும் மிகுதியும் பேசப்படும் பொருளாகின்றன. புராணங்களில் கூறப்-படும் கண்ணன் வடிவம் கூறப்படுவதுடன், ஆநிரை மேய்த்துக் கொண்டு, குழலூதிவரும் முல்லைநிலத்து மாயவன் உருவம் மிகுதியும் கூறப்படுகிறது. கறவைகள் பின்சென்று கானஞ்சேர்ந்துண்டு வாழும் ஆயர்குலத்தில் உதித்த கண்ணன் சிறப்பை வியந்து போற்றும் தமிழ் மனம் புலனாகிறது. கண்ணனாக வந்து இட்டுந் தொட்டும் ஆயர்குலத்துப் பெண்களுடன் விளையாடிய பின் அவனுடைய பெயர்-நாராயணன் என்னும் பரத்வ நிலைப்பெயர் எட்டெழுத்து மந்திரம்-சிறுபெயராகின்றது என்னும் தன்மையையும் ஆண்டாள்காட்டுகிறார். அவனுடைய சங்கு, சக்கரம் போன்ற பொருட்கள், பாம்பணை ஆகிய அனைத்தும், புராணக் கண்ணனாக அவனைக் காட்டுகின்றன. ஆனாலும் பாசுரங்களின் உணர்விற்கேற்ப, சக்கரத்தையும், பாம்-பணையையும் தொடர்புபடுத்தும் பாங்கு குறிப்பிடத்தக்கது. விருப்-புற்றுக் கேட்கிறேன் சொல்லாழி வெண்சங்கே' என்று சங்கினை விளித்துப் பேசும் ஆண்டாள், ''பாம்பணையார்க்குத் தம் பாம்பு போல் நாவு மிரண்டுள'' என்றும் பாடுகிறார். இங்கெல்லாம் புராணப் பொருள்களாக மட்டும் அவை நிற்கவில்லை. அப்பாற்-பட்டு மெய்ப்பொருள் காட்சியாகின்றன.

கண்ணன் அவதாரச் செய்திகள்:

கண்ணனின் வாழ்க்கையில் இடம்பெற்ற நிகழ்ச்சியாக ஆநிரை மேய்த்தல், பேச்சிமுலையுண்ணல், தாமோதரனாக உரலில் கட்டுப்படல், உரலில் பிணிப்புண்டு மருதமரம் அழித்தல், சகடாசுரவதம், கோவர்த்தன மலையெடுத்தல், காளிங்க நர்த்தனம், குவலாயபீடம் என்ற யானையின் கொம்பு ஒசித்தல், எருது, புல் வீழ்த்தல், கன்று (விளாமரம்) எறிதல், கம்சனை அழித்தல், சிசுபாலனை அழித்தல், மல்லனை அழித்தல், பிலம்பனை அழித்தல், குழல் ஊதி வருதல், போன்ற நிகழ்ச்சிகள் ஆண்டாள் பாடல்களில் இடம் பெறுகின்றன. பாகவதம், விஷ்ணு புராணம் கூறும் அதே முறையில் இவை காட்டப்படுகின்றன. கண்ணனின் சின்னஞ்சிறு பருவ நிகழ்ச்சிகளான வாயில் உலகு காட்டல், வெண்ணெய் திருடி உண்ணல் போன்றவற்றை ஆண்டாள் பாடல்களில் காணமுடியவில்லை. பெரியாழ்வார் தாய்மை உணர்வில் இவற்றை வியந்து போற்றுகின்றார். பெரியாழ்வார் இனங்காட்டிய கண்ணனை வீரனாக, காதலனாக அகப்பொருள் தலைவனாக ஆண்டாள் பார்க்கிறார். கண்ணனின் வீரச் செயல்களில் ஈடுபட்டு அவனிடம் காதல் கொண்டு, சங்கத்தமிழ் தந்த அகமும் புறமும் மரபாக, அதே வழித்தடத்தில் ஆண்டாளின் ஈரத் தமிழ் நடையாடுகின்றது. பகைவர்கள் நெருங்குவதற்கு அரியவனாக இருக்கும் அதே கண்ணன், காதல் கொண்ட தலைவிக்கு ஆர்யகுலப் பெண்களுக்கு-எளியவனாக இருக்கின்றான். ''அங்கண்மா ஞாலத் தரசர் அபிமான பங்கமாய் வந்துநின் பள்ளிக் கட்டிற் கீழே சங்கமிருப்பார்போல் வந்து தலைப் பெய்தோம்'' என்று ஆண்டாள் பாடுகின்றார். கண்ணனைப் புராணக் கடவுளாகவும் ஆர்யகுலத்துத் தலைவனாகவும் காதல் தலைவனாகவும ஆண்டாள் இனம் காட்டுகின்றார்.

தமிழ் மண்ணிற்கேயுரிய கண்ணன் புராணக் கதைகள் பலவற்றையும் ஆண்டாள் பாடுகின்றார். குடக் கூத்து ஆடியமை, கோபியர் ஆடை கவர்ந்தமை, தேனுகனை அழித்தமை, நப்பின்னை பற்றிய குறிப்பு ஆகியன இத்தன்மையன. குடக்கூத்து மூன்று இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ் மண்ணிற்குரிய இன்றைய கரக ஆட்டத்தின் தோற்றுவாய் குடக்கூத்தே. இதனை ஆண்டாள் பாசுரங்கள் வலியுறுத்தும். கோபியர் ஆடை கவர்ந்தமை தனியே ஒரு பத்து முழுவதிலும் (3) பேசப்படுகின்றது. இதில் கண்ணன் கோபியர் ஆடையைக் கவர்ந்து கொண்டு மரமேறி

நிற்க, பெண்கள் அவனிடம் தம் ஆடை கேட்டு நிற்பது கூறப்படுகின்றது. விஷ்ணு புராணத்தில் இக்கதை இடம்பெறவில்லை. ஹரிவம்சத்திலும் இடம் பெறாத இக்கதை பாகவதத்தில் மட்டும் காணப்படுகின்றது. தமிழில் அகநானூறு, புறநானூறு, சிலம்பு இவற்றில் இக்கதை இடம் பெறுகின்றன. கண்ணனின் இச்செயலைப் பாகவத வழிநின்று ஆண்டாள் பாடவில்லை. மாறாக, தோழியும் தானும் வேண்டிக் கேட்பதாகவும், ''எம் அன்னைமார் காணில் ஒட்டார்'' என்றும் தமிழ் அகமரபின்படி பாடுகின்றார். தேனுகனை அழித்த (கழுதை வடிவில் வந்த அசுரன்) செயலைப் பலதேவன் மீது ஏற்றிப் பாகவதம் கூறுகின்றது. ஆனால் அதனைக் கண்ணனின் செயலாக ஆண்டாள் பாடுகின்றார். தமிழ்ப் புராண மரபான இதனை அப்படியே பின்வந்த செவ்வை சூடுவார் பாகவதமும் பாடுகின்றது. நப்பின்னை பற்றிய குறிப்பே வடமொழிப் புராணங்களில் இல்லை. நப்பின்னை தமிழ்ப் புராண மாந்தர். முல்லைநிலத்துக் கண்ணனின் தேவியான நப்பின்னையைப் பின்வந்த வடமொழியாளர் -கண்ணன் அருளாளர்கள்-இராதையாக ஏற்றுப் போற்றினர். உருக்குமணியின் மனத்தைப் பற்றிய ஓரிடத்தில் மட்டும் பேசும் ஆண்டாள் நப்பின்னை கேள்வனாகவே கண்ணனைக் காட்டுகின்றார். இவ்வாறு புராணச்செய்திகளைத் தமிழ் அகப்புற மரபின் வழியே ஆண்டாள் காட்டுகிறார்.

இராமன் அவதாரச் செய்தி

சூர்ப்பனகையின் மூக்கறிந்த செயலை இலக்குவன் செய்ததாக வால்மீகி காட்ட, ஆழ்வார்கள் அதனை இராமன் செயலாகவே பாடுகின்றனர். ஆண்டாள் பாடலிலும் இதனைக் காண்கின்றோம் (கொல்லை யரக்கியை மூக்கரிந்திட்ட குமரனார்). ஆழ்வார்கள் காலத்தில் நாட்டுப்புற வழக்காக இக்கதை வேறுபாடு இருந்திருக்கலாம். அதனை அவர்கள் இலக்கிய வழக்காக ஆக்கினர்.

ஸ்ரீவில்லிபுத்தூர், திருவரங்கம், திருமாலிருஞ்சோலை, திருவேங்கடம் ஆகிய தலங்களில் அர்ச்சாவதார வடிவங்களை ஆண்டாள் பாடியுள்ளார். கண்ணனின் புராணச் செய்திகளை மிகுதியாகவும், தலபுராணச் செய்திகளைக் குறிப்பாகவும் ஆண்டாள் காட்டுகின்றார்.

புராணக் கருத்து, குறியீட்டு நிலையிலும் நின்று பாடற் கருத்தை விளக்குகிறது. சான்றாக, 'ஓங்கி உலகளந்த உத்தமன்' என்று வரும் திருப்பாவை மூன்றாம் பாட்டிலே, பாற்கடலில் பள்ளிகொண்டிருந்த திருமால், மகாபலியால் நோவுபட்டு வருந்தியழைத்த தேவர்களின் குரல் கேட்டவுடன் காப்பதற்கு ஓடி வருகின்றான். பள்ளிகொண்ட நிலையில், பனிப்பட்ட மூங்கில்போலச் சாய்ந்து கிடந்தவன் தேவர்களின் குரல் கேட்டதும், கதிரொளிபட்ட மூங்கில் போலே ஓங்கினான். இங்கு புராணக்கதை நிகழ்ச்சி, கருத்தை விளக்கும் குறியீடாகிறது. தன்னடியாரைக் காக்க அவன் ஓங்கி உலகளந்தான் என்பது பெறப்படுகிறது அடுத்தநிலையில், 'ஓங்குபெருஞ் செந்நெல்' என்பதுடன் இந்த 'ஓங்கி உலகளந்த' என்ற புராணக் கதை தொடர்புபடுத்தப்படுகிறது ஓங்கி உலகளந்தவன்போல, ஆயர்பாடியில் ஸ்ரீவில்லிபுத்தூரிலே-நெற்பயிர்களும் ஓங்கி வளர்ந்துள்ளன. இவ்விடத்தில் புராணக்கதை நிகழ்ச்சி இயற்கைவளம் காட்டும் குறியீடாகவும் செயற்படுகிறது.

முடிவுரை:

புராணம் என்பதைக் கண்ணன் வரலாறாகவும் அவதாரச் செயல்களைக் கூறுவதாகவும் பெரும்பாலும் ஆண்டாள் காட்டுகின்றார். வடமொழி புராணச் செய்திகளையும், தமிழ்ப் புராணச்செய்திகளையும் ஆண்டாள் வெளிப்படுத்துகின்றார். அவற்றுள் தல புராணச் செய்திகளும், மக்கள் வழக்கிலிருந்த நாட்டுப்புறக் கதை வேறுபாடுகளும் இடம் பெறுகின்றன. வெளிப்படுத்தும்போது தமிழ் அகப் புற மரபுகளில் தலைவனாக - காதலனாக - கண்ணனைக் காட்டுகின்றார். இறைவனைப் பாட்டுடைத் தலைவனாக்கி, மன்னனைப் பாடாது மாதவனைப் பாடும் நிலையும், மானுடக் காதலை விடுத்து உயிர்கள் இறைவனிடம் கொள்ளும் பேரின்பக் காதலைப் பாடும் நிலையும் இணைகின்றன. இதனால் சங்க இலக்கிய மரபுகளில் காலூன்றிப் புராணத்தை வெளிப்படுத்துகின்றார். புராணம், இலக்கியத்தில் கருத்தை வெளிப்படுத்தும் உவமையாக, உருவகமாக அமையும் நிலையிலிருந்து மாறுபட்டு, கடவுள் பாடுபொருளானதால் அதற்கேற்ப அதனை விளக்கும் நிலைக்குச் செல்கின்றது. சமயப் பொருளை விளக்கும் வண்ணம் புராணம் இடம் பெறுகின்றது. வடமொழி வழக்கும், தமிழ் வழக்கும் தம்முள் கலந்து இலக்கிய வடிவம் பெறுகின்றன என்பதைப் புராணத்தின் பயன்பாட்டால்

அறிகின்றோம். இதனை, வாமனன் அவதாரமாக வந்து மூன்றடி மண் கேட்டு யாசிக்கும் நிலையை, பிச்சை ஏற்ற நிலையைப் பாடும் ஆண்டாள் பாசுரம் வலியுறுத்தும் தலைவியின் பெய்வளையை அவன் பிச்சை ஏற்றுச் சென்றான் என்று ஆண்டாள் பாடுகின்றார்.

''மச்சனி மாட மதிளரங்கள் வாமனனார்
பச்சைப் பசுந்தேவர் பண்டு நீரேற்ற
பிச்சைக் குறையாகி யென்னுடைய பெய்வளைமேல்
இச்சை யுடையர் . . . . '' (நா. தி. 11. 4)

என்று வருகிறது. கண்ணனின் மையலில் ஆட்பட்டு மெலிவால் ஏற்படும் வளைநீக்கம் என்ற செயல் விளக்கம் பெறப் புராணம்-வாமனன் அவதாரக் கதை-இடம்பெறுகின்றது. வளை நீங்குவதை எனது; என்னும் புறப்பற்று நீங்குவதாக ஆசாரிய ஹிருதயம் தத்துவ விளக்கமாக குறிப்பிடும் (''கலை வளை அஹம் மம க்ருதிகள்'' - ஆசாரிய ஹ்ருதயம், II சூ. 147) மாபலியிடம் அவனுடைய மண்ணை யாசிப்பதையும் தலைவியிடம் வளை யாசித்ததையும் இணைத்து, புராணமாகக் காட்டி, அதனூடே சமயச் செய்தி - தத்துவ விளக்கம் காட்டப்படுகிறது. பிட்சாடன வடிவாகச் சிவனைப் பாடுகையில் இவ்வாறே வளை கழன்ற நிலையைப்பாடும் தேவார ஆசிரியர்களிடம் இப்போக்கைக் காணலாம். புராணத்தின் பயன்பாடு பற்றி மேற்கூறிய கருத்து இதனால் வலிமைபெறும். இவ்வாறு, ஆண்டாள் பாசுரங்களில் இடம்பெறும் புராணச் செய்திகள், வழக்கு வேறுபாடுகள், பயன்பாடு என்பவற்றை அறிகின்றோம். புராணம் மெய்ப்பொருள் விளக்கி நிற்கிறது. அத்துடன் வாழ்வியல் காட்டும் களஞ்சியமாகவும் நிற்கிறது.

அறிவிப்பு

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகப் பேரவைக்கு, 1981ம் ஆண்டு தமிழ்ப்பல்கலைக் கழகச் சட்டம் 18 - பிரிவு (5)ன் படி, மதுரைத் தமிழ்ச் சங்க உறுப்பினர்களால், சங்கச் செயலாளரும். செந்தமிழ் இதழின் ஆசிரியருமாகிய திரு T.P.M. பெரியசுவாமி. Ex. M. L. A. அவர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளார்கள். உறுப்பினர் பதவிக்காலம் 1982 முதல் நடைமுறைக்கு வருகின்றது.

மதுரைத் தமிழ்ச் சங்க ஆட்சிக் குழுவினர்

சங்கச் செய்திகள்

மதுரைத் தமிழ்ச் சங்கத் தமிழ்த் தேர்வு பற்றிய செய்திகள்

மதுரைத் தமிழ்ச் சங்கத் தமிழ்த் தேர்வு பற்றிய அறிவிப்புகள் மற்றும் தமிழ்த் தேர்வில் மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்றவர்கள் பற்றிய குறிப்புகள் :

1981-82 ஆம் ஆண்டில் உயர்நிலைப்பள்ளி- பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கும், மேல்நிலைப்பள்ளி - பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கும் மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய தமிழ்த் தேர்வில் மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் பற்றிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்களையும், ஒவ்வொரு பள்ளியிலும் முதன்மை-யாகத் தேர்ச்சி பெற்று நூற்கள் பரிசு பெற்ற மாணவர்களையும் பிற மாணவர்களையும் மதுரைத் தமிழ்ச் சங்கச் சார்பில் வாழ்த்து-கின்றோம். மதுரைத் தமிழ்ச் சங்கத் தமிழ்த்தேர்வில் ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களைக் கலந்து கொள்ளச் செய்து வரும் உயர்நிலை, மேல்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தமிழாசிரியர்களுக்கும் பிறஅன்பர்களுக்கும் எங்களது அன்புகனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ரொக்கப்பரிசு பெற்றவர்கள் பற்றிய விபரம்

உயர்நிலைப்பள்ளி 10-ஆம் வகுப்புத் தமிழ்த் தேர்வில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் விபரம் :

வ.எண்	மாணவர் பெயர் பள்ளி முகவரி	மதிப்பெண் 200க்கு	பரிசு விபரம்	பரிசுத் தொகை
1)	M.S. சுமதி (11095) அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளி, மானாமதுரை PIN: 623606	178	முதல் பரிசு	ரூ 100

2)	மு. உஷாராணி (11041) அரசு உயர்நிலைப்பள்ளி கீழ இராஜகுலராமன் PIN. 626136 இராஜபாளையம் (via)	175	இரண்டாம் பரிசு	ரூ 50
3)	வெ. வீரப்புத்திரன் (10714) விவேகானந்தா அரசினர் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி வில்லியனூர் 605110 பாண்டிச்சேரி	174	மூன்றாம் பரிசு	ரூ. 15
4)	R. சாருமதி (7954) அரசினர் உயர்நிலைப்பள்ளி ஆட்சிப்பாக்கம் PIN : 604101 திண்டிவனம் T.K.	174	,,	,,
5)	K ரகுநாதன் (15324) T.V.S. மேல்நிலைப்பள்ளி மதுரை.	174	,,	,,

(மூன்றாம் பரிசுத்தொகை ரூ 25 உடன் ரூ 20 சேர்த்து ஒரே மதிப்பெண் பெற்ற மூன்று மாணவருக்கும் சமமாக பிரித்துக் கொடுக்கப்படுகிறது.)

6)	இரா. சித்ரா (15357) புனித சூசையப்பர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி பழைய குயவர்பாளையம், மதுரை-625009	173	ஊக்கப் பரிசு	ரூ. 10
7)	S. சுந்தரராசன் (15342) T.V.S. மேல்நிலைப்பள்ளி T.V.S- நகர் மதுரை	172	,,	,,

8) J. ஒபுலெட்சுமி (6895) N.L.C. பெண்கள் மேல்நிலைப் பள்ளி, நெய்வேலி-3 தெ. ஆ. மாவட்டம்	172	ஊக்கப் பரிசு	ரூ. 10
9) பொ. பிச்சை (1199) தி. வெ. அ. நல்லழகு நாடார் உயர்நிலைப்பள்ளி பேரிலோவன்பட்டி P.O. எட்டாயபுரம் (via) நெல்லை	171	,,	,,
10) B. ஆண்டாள் (9285) சின்னாத்தா அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளி முத்தியால்பேட்டை புதுவை-3	171	,,	,,
11) க. சொர்ணராஜ் (1200) தி. வெ. அ. நல்லழகு நாடார் உயர்நிலைபள்ளி பேரிலோவன்பட்டி P.O. எட்டயபுரம் வழி, நெல்லை	170	,,	,,
12) சீ. பார்வதி (8686) அரசுயர்பள்ளி துரைப்பாடி- 632002. வேலூர், வ. ஆ.மாவட்டம்	170	,,	,,
13) பெ. பாஸ்கரன் (10445) அரசுயர்பள்ளி காட்டேரிகுப்பம் வழுதாவூர் P.O. பாண்டிச்சேரி	170	,,	,,
14) V. பார்வதி (16819) அரசினர் மகளிர் மேல் நிலைப்பள்ளி T.B. ரோடு மதுரை-625010	170	,,	,,

15) கா. மேபல் (1126) 169 ஊக்கப் பரிசு ரூ. 10
மேரிசார்ஜெண்ட்
மேல்நிலைப்பள்ளி
பாளையங்கோட்டை P.O.

16) C. உமாதேவி (2347) 169 ,, ,,
அரசு மகளிர் உயர்பள்ளி
மேச்சேரி P.O.
சேலம் Dt.

17) R. இரேணுகா (2780) 169 ,, ,,
இராமசாமி செட்டியார்
அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி,
ஒண்டிப்புதூர்-641016
கோவை Dt

மேல்நிலைப்பள்ளி பன்னிரண்டாம் வகுப்புத் தமிழ்த் தேர்வில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் விபரம்.

1) ஆர். அம்சவேணி (4566) 175 முதல் பரிசு ரூ 50

2) கே. வசந்திமங்கை (4602) 175 ,, ,,
கண்ணகி அரசினர் பெண்கள்
மேல்நிலைப்பள்ளி
வில்லியனூர், பாண்டிச்சேரி,

முதற் பரிசுத் தொகை ரூ 100-ஐ ஒரே மதிப்பெண் பெற்ற, இரு மாணவியருக்கும் சமமாக பிரித்துக் கொடுக்கப்படுகிறது.

3) N.K ஆனந்தி (9280) 173 இரண்டாம் பரிசு ரூ 50
சீதாலெட்சுமி மகளிர் மேல்
நிலைப்பள்ளி
திருநகர், மதுரை-6.

4) இரா. செந்தில்குமார் (190) 172 மூன்றாம் பரிசு ரூ 25
இராஜா மேல்நிலைப்பள்ளி
எட்டயபுரம் P.O
நெல்லை Dt.

5)	எம். ஜெயஸ்ரீ (3655) N.L.C. மகளிர் மேல் நிலைப்பள்ளி, நெய்வேலி, தெ.ஆ. மாவட்டம்	171	ஊக்கப் பரிசு	ரூ 10
6)	S. முருகேசன் (6749) M.S.P சோலை நாடார் ஞாபகார்த்த மேல்நிலைப்பள்ளி திண்டுக்கல்—624005	171	ஊக்கப் பரிசு	ரூ. 10
7)	சி. இரா. வசந்தி (11745) அவ்வை மாநகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளி கீழாவணி மூலவீதி மதுரை-1.	170	,,	,,
8)	சே. ஹுசேன்பரீத் (3001) மஜ்ஹருல் உலூம் மேல்நிலைப் பள்ளி ஆம்பூர் P.O. வ. ஆ. Dt.	170	,,	,,
9)	கே. சித்ரா (3647) N.L.C. மகளிர் மேல்நிலைப் பள்ளி நெய்வேலி-3.	169	,,	,,
10)	ஜெந்தி சீனிவாசன் (3653) N.L.C. மகளிர் மேல்நிலைப் பள்ளி நெய்வேலி-3	169	,,	,,
11)	V.பிரபா (9297) சீதாலெட்சுமி மகளிர் மேல்நிலைப்பள்ளி, திருநகர் மதுரை-6.	168	,,	,,
12)	ஆர். நாகராசன் (9902) சேதுபதி மேல்நிலைப்பள்ளி மதுரை	168	,,	,,

13)	A. சரவணன் (2134) கலியாணசுந்தரம் மேல் நிலைப் பள்ளி தஞ்சாவூர்	167	ஊக்கப்பரிசு ரூ10
14)	G. பாண்டியராசன் (6745) M.S.P. சோலைநாடார் ஞாபகார்த்த மேல்நிலைப்பள்ளி திண்டுக்கல் P.O.	167	,, ,,
15)	ஜஹாங்கீர்ஷா (9930) சேதுபதி மேல்நிலைப்பள்ளி மதுரை.	167	,, ,,
16)	லோ.அங்கயற்கண்ணி (10727) ஈ.வே. இரா. நாகம்மையார் மகளிர் மேல்நிலைப்பள்ளி தெற்குவெளிவீதி மதுரை—625001.	167	,, ,,

தமிழ்த் தேர்வு பற்றிய அறிவிப்பு

பேரன்புடையீர்! வணக்கம்!

பாலவநத்தம் குறுநில மன்னர் வள்ளல் பாண்டித்துரைத் தேவரவர்கள், புகழ்பெற்ற இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தைக் கூடல் மாநகரில் 1901-ஆம் ஆண்டு நிறுவினார்கள். தேவரவர்கள் இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தை நிறுவியதன் நோக்கம் மிகஉயர்ந்ததாகும். பாண்டிய மன்னர்களால் தோற்றுவிக்கப்பட்ட முதல், இடை, கடைச் சங்கக் காலங்களில் செந்தமிழ் சிறப்புற்று விளங்கியது. அதன் வழியில் தமிழில் சிறந்த புலமை பெற்றவர்களை உருவாக்க எண்ணிய தேவரவர்கள் தமிழ் மொழிக்கூடம் ஒன்றை நிறுவினார். இன்றைக்கு கவிஞர்களாகவும் தமிழ் அறிஞர்களாகவும் இருப்பவர்களில் பலர் இம்மொழிக்கூடத்தில் தங்கி முறையாகக் கல்வி பயின்று பண்டிதம் என்னும் பட்டத்தைப் பெற்றவர்களாவர்.

பாண்டித்துரைத் தேவர் அவர்களுக்குத் திருவுருவச் சிலை

பாண்டித்துரைச்சாமி தேவர் அவர்கள் பழம்பெரும் மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கத்தை நிறுவித் தமிழ் வளர்த்த தொண்டினை அறிந்து அன்னாரின் திருவுருவச்சிலையை மதுரையின் மையப் பகுதியில் நிறுவி தமிழக அரசு சிறப்புச் செய்துள்ளது.

தேர்வின் அமைப்பும் பயனும்:

உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள், கல்லூரி மாணவர்கள் முறையே பொதுத் தேர்வுகளிலும் பல்கலைக்கழகத் தேர்வுகளிலும் தமிழில் தோல்வி அடைந்து விடக்கூடாது என்ற உயர்ந்த எண்ணத்தில் பாண்டித்துரைத் தேவர் அவர்கள் தொடங்கிய தமிழ்த் தேர்வு கடந்த 81 ஆண்டுகளாகத் தமிழ் நாட்டிலுள்ள உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் செவ்வனே நடத்தப்பெற்று வருகிறது. இத்தேர்வுகளில் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் கலந்துகொண்டு பெரும்பயன் பெற்று வருவதைத் தமிழ் அன்பர்கள் நன்கு அறிவார்கள்.

உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு அரசு வகுத்துள்ள தமிழ்ப் பாடப் பகுதிகளே தமிழ்ச்சங்கத் தமிழ்த் தேர்வுகளுக்கும் உரிய பாடப்பகுதிகளாகும். அரசு எம்முறையில் வினாக்கள் அமைத்துத் தேர்வுகள் நடத்துகின்றனவோ அம்முறையிலேயே தமிழ்ச் சங்கமும் வினாக்கள் அமைத்துத் தேர்வுகள் நடத்தி வருகின்றது. பொதுத் தேர்விற்கு (Public Examination) முன்னதாகவே தமிழ்ச் சங்கம் தேர்வினை நடத்தி மாணவர்களுக்கு அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண்ணைத் தெரிவித்து வருகின்றது. அதனால் மாணவர்கள் தங்கள் நிலையினை உணர்ந்து பொதுத்தேர்விற்கு, நன்முறையில் தங்களைத் தயார் செய்து கொள்ள தமிழ்ச் சங்கத் தேர்வு பெரும் வாய்ப்பளிக்கின்றது.

சான்றிதழும் சிறப்புப் பரிசும்

தமிழ்ச் சங்கத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கட்கு அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண் அடிப்படையில் சான்றிதழ் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு உயர்நிலைப்பள்ளியிலும் மேல்நிலைப்பள்ளிலும் முதன்மையாகத் தேர்ச்சி பெறும் மாணவர்கட்குப் பரிசாக நூல்கள் வழங்கப்படுகின்றன. மாநில அளவில் முதல் மூன்று நிலையில் தேர்ச்சி பெறுபவர்களுக்கும், பாராட்டும் அளவிற்கு மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சி பெறுபவர்களுக்கும் ரொக்கப் பரிசுகள் அளிக்கப்படுகின்றன. அம்முறையில் சென்ற ஆண்டு மட்டும் முப்பத்துமூன்று மாணவர்கள் ரொக்கப் பரிசினைப் பெற்றுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம். ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் பற்றிய விபரங்கள், தமிழ்ச்சங்க வெளியீடாகிய 'செந்தமிழ்' செப்டம்பர் 1982 மாத இதழில் வெளியிடப்பட்டுள்ளன. தமிழ்ச்சங்கச் சான்றிதழ் பெற்றிருப்பவர்களுக்குத் தனிப்பட்ட சிறப்பும் பெருமையும் என்றும் உண்டு.

தேர்வு நாள், தேர்வுக் கட்டணம்:-

உயர்நிலைப் பள்ளி
மேல்நிலைப் பள்ளி

வகுப்பு	தேர்வுக் கட்டணம்	தேர்வு நாள்	தேர்வு நேரம்
உயர்நிலைப் பள்ளி பத்தாம் வகுப்பு	ரூ4.00	12-2-83	முதல்தாள் 10—12.30 இரண்டாம் தாள் 2—4.30
மேல்நிலைப் பள்ளி இறுதியாண்டு பொதுத் தமிழ்	ரூ.4.00	26-2-83	முதல்தாள் 10—1 இரண்டாம் தாள் 2—5
சிறப்புத் தமிழ்	ரூ.2.25	28-2-83	10—1

கட்டணம் அனுப்ப வேண்டிய இறுதிநாள் 12—1—83

தேர்வு நடத்துவதற்காகப் பிடித்துக் கொள்ள வேணடிய செலவுத் தொகை

10 மாணவர்களுக்கு மேல் தேர்வெழுதும் உயர்நிலைப் பள்ளிகள் / மேல்நிலைப் பள்ளிகள் / மொத்தத் தேர்வுக் கட்டணத் தொகையில் பதினைந்து விழுக்காடு (15%) தேர்வுச் செலவிற்காகப் பிடித்துக் கொண்டு மீதித் தொகை முழுவதையும் சங்கத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். 10 மாணவர்களுக்குக் குறைவாகத் தேர்வில் கலந்து கொள்ளும் பள்ளிகள் செலவுத் தொகை ஏதும் பிடித்துக் கொள்ளாமல் முழுத் தொகையினையும் சங்கத்திற்கு அனுப்ப வேண்டும். தேர்வு நடத்தும் வகையில் ஆகும் அனைத்துச் செலவிற்கும் நாங்கள் குறிப்பிட்டுள்ள இத்தொகைக்கு மேல் செல-வானால் அத்தொகையை மாணவர்களிடமிருந்து வசூல் செய்து கொள்ளலாம். குறிப்பிட்டுள்ள செலவுத் தொகைக்கு மேல் செலவு ஆகாதபடி தேர்வு மேற்பார்வையாளர்களுக்குரிய அன்பளிப்புத் தொகையினைக் கட்டுப்படுத்தும்படி அன்புடன் கேட்டுக் கொள்-கிறோம். மாணவர் பெயர்ப் பட்டியலோடு விடைத்தாள் திருத்த விரும்பும் ஆசிரியர் பட்டியல், வரவு செலவுப் பட்டியல் முதலிய-வற்றையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

அன்பளிப்பு

விடைத்தாள் திருத்துவதற்குரிய அன்பளிப்புத் தொகையினை இவ்வாண்டு முதல் தாள் ஒன்றிற்கு, பின்வருமாறு உயர்த்தப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

உயர்நிலைப் பள்ளி - பத்தாம் வகுப்பு	ரூ. 1.00
மேல்நிலைப் பள்ளி - இறுதியாண்டு (பொதுத்தமிழ்)	,, 1.00
சிறப்புத்தமிழ்	,, 1.10

இவ்வன்பளிப்பு உயர்வு தமிழ்த்துறையைச் சேர்ந்த ஆசிரியப் பெருமக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் என்பதில் நாங்கள் பெருமைப்படுகின்றோம்.

அன்பு வேண்டுகோள்

தேர்வினைக் குறித்த காலத்தில் செவ்வனே நடத்தவும் தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கைக்குத் தேவையான மாணவர்தம் பெயர்ப் படிவங்களை உங்களுக்கு அனுப்புவதற்கும் முன்கூட்டியே மாணவர் எண்ணிக்கையை அறிந்திட வேண்டிய கட்டாயச் சூழ்நிலையில் இருக்கின்றோம். ஆகையால் இந்த இதழின் கடைசிப்பக்கத்தில் உள்ள பள்ளியிலிருந்து கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையைத் தோராயமாகக் குறித்து அப்பக்கத்தினை மட்டும் எடுத்து எங்களுக்கு அனுப்பிவைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

உங்களிடமிருந்து தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையைத் தெரிவிக்கும் பாரம் கிடைத்த உடன் மாணவர்களின் எண்ணிக்கைக்குத் தேவையான (1) மாணவர் பதிவுப் பட்டியலும் (2) வரவு செலவுப் பட்டியலும் (3) விடைத்தாள் திருத்த விரும்பும் ஆசிரியர் பெயர்ப் பட்டியலும் (4) கால அட்டவணை தேர்வுக் கட்டணம், தேர்வுச் செலவிற்குப் பிடித்துக்கொள்ளும் தொகை விபரப் பட்டியல் முதலியன அனுப்பி வைக்கப்படும்.

ஏதாவது ஒரு சூழ்நிலையில் உங்கள் மாணவர்கள் தேர்வில் கலந்துகொள்ளஇயலவில்லையென்றாலும் எங்கட்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ்ச்சங்கத் தேர்வில் மாணவர்கள் கலந்துகொள்ள அனுமதிக்கும் அரசு ஆணை

R. Dis. 166528/65 dated 22—12—65 என்ற ஆணையின் (G.O.) மூலம் மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வினை கல்வி நிலையங்களில் நடத்திக் கொள்வதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

சங்கத்தோடு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

செயலாளர்,
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை - 625 001.

இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தின் நற்பணிகள் நாளும் செழிக்க உங்களுடைய ஒத்துழைப்பின் மூலம் எங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கும்படி அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

சேதுபதிமகாராணி
திருமதி *த. இந்திராதேவி*
தலைவர்

தங்கள் அன்புள்ள
T. P. M. *பெரியசுவாமி*
செயலாளர்

(தமிழ்ச் சங்கத்திற்கு எடுத்து அனுப்ப வேண்டிய பக்கம்)

தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை

அனுப்புநர்: ______________________

____

____

பெறுநர்

செயலாளர் அவர்கள்,
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001.

ஐயா,

எங்களுடைய உயர்நிலைப்பள்ளி/மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் நம்முடைய தமிழ்ச்சங்கத் தமிழ்த் தேர்வில் தோராயமாகக் கீழே குறிப்பிட்டுள்ள விபரப்படி கலந்து கொள்வார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம். இந்த மாணவர்களின் எண்ணிக்கைக்குத் தேவையான மாணவர் பெயர்ப் பட்டியலும், தேர்வு பற்றிய பிற குறிப்புக்களையும் அனுப்பி வைக்கவும். விடைத்தாள் திருத்த விரும்பும் ஆசிரியர்களின் எண்ணிக்கை ———.

வகுப்பு	மாணவர்களின் எண்ணிக்கை
உயர்நிலைப் பள்ளி (பத்தாம் வகுப்பு)	———
மேல்நிலைப் பள்ளி 2-ஆம் ஆண்டு (பொது)	———
மேல்நிலைப்பள்ளி 2-ஆம் ஆண்டு சிறப்புத் தமிழ்	———

நாள்: இங்ஙனம்

தலைமையாசிரியர் / தமிழ்த்துறைத் தலைவர்

மணியம் பிரஸ், மதுரை—9.